SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 11-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு பங்குனிமாசம் 16-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## தூதுசென்ற சூசைமாதவன்

[ "தேம்பாவணியை" ஆதாரமாகக்கொண்டு எழுதியது. ]

சூசையே! தங்கள் அருந்தவத்தால் பெருமையடைந்த அப்பிதாக்கள் நெடுநாளாக இருந்துவரும் அந்தஸ்தலத்துக்கு நீ நம்முடைய தூதுவனுகச்சென்று மனுமகனுக அவதரித்திருக்கும் தேவகுமாரன் தமதுஉயிரைப் பலியாகத்தந்து மனிதரை இரட்சிக்குங்காலம் சமீபித்துவிட்டது; இனி அவர்கள் மோட்ச வீட்டைஅடைந்து இன்புற்று வாழ்வார்கள் என்னும் நமதுதயையின் செய்தியை அவர்களுக்கு எடுத்துக்கூறுவாயாக என்று திருவாக்கருளிய பிதாவாகியகடவுள் மேலும் சூசைமாதவனைநோக்கி வசனிப்பார்:

உடல்கடிந் (து) உவந்(து)உயிர் உறையும் நாடென
மடல்கடிந் (து) எரிபட் வாடும் பூஇணை
அடல்கடிந் (து) இளைத்தநின் ஆக்கை நீக்கிஇவ்
இடன்கடிந் (து) அங்கண்நீ விரைவில் ஏகென்றான்.

ஆயினும்அந்தநாடு உடலைவிட்டுநீங்கிய உயிர்கள்வாழுகின்ற நாடாகையால், எரிபட்டு இதழ்கள்நீங்கி வாடுகின்ற பூவைப்போல நோயால்ஒடுங்கி இளைத்துவாடின உனதுஉடலை நீயும் நீக்கி இவ்விடம்விட்டகன்று அங்கே விரைந்து போவாயாக என்றார்.—அங்ஙனம் பிதாவாகிய கடவுள் சொன்னபோதே

என்றலோ(டு) உயிர்தனில் இனிய மைந்தனும்
மன்றலோ(டு) இயைந்தமா மரியும நீக்கவே
பொன்றலோ(டு) உலக்கினும் பொலி திருஉளத்(து)
ஒன்றலோ(டு) இனிதில்என் (று)உணர்வில் தேறினன்.

அங்ஙனம் பிதாவாகியகடவுள் சொன்னபோதே, தனது உயிரைக்காட்டிலும் தனக்குஇனிய திருக்குமாரனையும், திருமணப்பிணைவோடுசேர்ந்த மரியம்மாளையும் விட்டுப்பிரிதலே சாவதிலும்கொடிய வேதனைசெய்தாலும் சிறந்த தேவதிருவுளத்துக்குஇணங்கி நிற்பதற்கொத்த நன்மைஇல்லையென்று மனதில் தேறினன் சூசைமுனிவன்.

களிமுகத்(து) இணங்கிஅன்னன் கடவுளைப் பணியும்
வேலை
வெளிமுகத்(து) உற்றகாட்சி மின்னென மறைந்து
தானே
ஒளிமுகத்(து) இலங்கிச்சூழ உவப்புற மகனும்தாயும்
அளிமுகத்(து) இறுப்பநோக்கி அறைதல்பேர் உயிர்ப்
போ(டு)உற்றான்

அங்ஙனம்சூசை மனதில்தேறித் தனக்குஏவிய பணியைச் செய்ய முகமலர்ந்து சம்மதித்து ஆண்டவன்பாதத்தை வணங்கிய பொழுது, முன்னர்மறைவின்றி முகம்முகமாகத் தோன்றிய காட்சி மின்னலைப்போல் விரைந்துமறைந்துபோக, முகத்தில் பிரபை இலங்கியபடி தன்னைச்சூழ்ந்து திருக்குமாரனும், அவனை ஈன்றதேவதாயும் களிகூர்ந்து அன்பொழுகும் திருவதனங்களுடன் இருப்பதைக்கண்டு தேவபுதல்வனைநோக்கி பெருமூச்சோடு சொல்லுகின்றான்.

ஓர் இயல் பாகஉன்னோ(டு) ஓர்என்பான் பணித்த ஏவல்
பேர்இயல் (பு)அறிவில்கண்டாய் பிரிதலே வேண்டும்
இஃதே
சூர்இயல் துன்பத்(து) எல்லாம் துன்பமாய் வருத்து
மாகில்
சீர்இயல்(பு) இயற்றும்தேவ திருவுளம் நன்றில்நன்றே

திருக்குமாரனைநோக்கிச் சூசைமாதவன் எங்ஙனம் சொன்னனெனில், தேவசுபாவம் ஒன்றாகையினலே உன்னோடு ஒன்றாகியபிதா கற்பித்தஏவலை உனதுதிருச்சுபாவத்தினல் அறிந்துகொண்டாயே. ஆதலால் நான்உங்களைவிட்டுப் பிரிந்துபோக வேண்டியதே. இதுசுபாவத்திலே நோயின்துன்பத்திலெல்லாம் பெருந்துன்பமாக என்னைவருத்துமே. ஆயினும் இயல்பிலே எல்லாச்செல்வத்திற்கும் காரணமாகிய தேவதிருவுளம் எல்லாநன்மையிலும் உத்தமநன்மையே என்றான். அதன்மேல் (வரும்)

## சமாதான செபப் படையெழுச்சி

தேசங்களிடையே இருந்துவருகின்ற பரஸ்பரவிரோதத்தை ஒழித்துவிடுமாறு திருப்பாடுகளின் ஞாயிறன்றுதொடக்கப்படவிருக்கும் ஓர் "சமாதான செபப்படையெழுச்சி"யில் சேர்ந்துகொள்ளுமாறு கத்தோலிக்க உலகமுழுவதுக்கும் பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசர் சென்ற 11-ந்திகதி சனிக்கிழமை விண்ணப்பஞ்செய்திருக்கிறரென வத்திக்கானில் இருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. "யுத்தம் முடிந்தபோதிலும், பரஸ்பர விரோதத்துக்கு ஏதுவாய் என்றைக்கும் வளர்ந்துகொண்டிருக்கின்ற காரணங்களுக்கு ஓர் முடிவைக் கொண்டுவரக்கூடியதாக நாம்விரும்பும் ஸ்திரமும், நிரந்தரமுமான சமாதானத்தை நாம இன்னுமே அடைந்துகொள்ளவில்லை. அநேகதேசங்கள் ஒன்று மற்றொன்றுக்குத் தடையாய்நின்று இடையூறு பண்ண முயன்றுவருகின்றன. பரஸ்பரநம்பிக்கை குறைவதாலே போராயுதங்களைச்செய்து பெருக்கும்பந்தையம் எல்லாவற்றையும்தடுத்துநிறுத்திவைத்துத் தனதுவேகத்தை ஒன்றுகூட்டுகின்றது" என்றும் பாப்பரசர் அப்போதுகூறலாயினர். ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாஆலயத்திலே நிகழும் பங்குனிமாதம் 26-ந் திகதியாகிய திருப்பாடுகளின் ஞாயிறன்று இந்தச்சமாதான செபப்படையெழுச்சியைத் தாமேமுதன்மைவகித்து நடத்தப்போவதாகவும் பாப்பரசர் அறிவித்திருக்கின்றார்.

### அமெரிக்கரின் யாத்திரை

அமெரிக்க கத்தோலிக்கரின் பரிசுத்தவருட முதற்பெரும் யாத்திரைக்கூட்டமானது சில தினங்களின்முன் ரோமாபுரி போய்ச் சேரலாயிற்று. அமெரிக்கஐக்கியதேசத்தின் 33 நாடுகளையும், கலம்பியாப்பிரிவையுஞ் சேர்ந்த 515 கத்தோலிக்கர்உட்பட இந்தயாத்திரைக் குழுவினரை நியூயோர்க்கர் அதிமேற்றிராணியாரான கருதினல் பிரான்சீஸ் யோசெவ் ஸ்பெல்மன் ஆண்டவர் தலைமைவகித்து நடத்திச்சென்றார். இவ்வருடம் முடிவதற்குள் இன்னும்அநேக அமெரிக்ககத்தோலிக்கர் ரோமாபுரியைத் தரிசிக்கவிருப்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

### முத்திப்பேறுபெற்ற பட்டம்

பரிசுத்தபாப்பரசர் தமக்குண்டான இன்புளுவென்ஸாஎனும் குளிர்சுரம் பூரணமாகக் குணமாகி மாசிமாதம் 20-ந் திகதி முதல் திரும்பவும் பேட்டிகள் அருளத்தொடங்கிவிட்டார். அமலோற்பவ மரியநாயகிகுமாரத்திகளசபையை அடியிட்டவளும், "பணியாளர்களின் சிநேகிதி" என அழைக்கப்படுகிறவளுமான வின்சென்தா மரிய லோப்பெஸ் விக்குனு அம்மாளுக்கு மாசிமாதம் 17-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை அர்ச். பேதுருவானவர்ஆலயத்திலேமுத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டப்படலாயிற்று. அன்றுபிற்பகல் பாப்பரசர் புதிய முத்திப்பேறுபெற்ற பட்டதாரியின்திருப்பண்டங்களை வணங்கிப் பூசிக்குமாறு ஆலயத்துக்கு எழுந்தருளியபோது பதினுயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பரித்து அவரை வாழ்த்தினர்கள்.

### இலங்கைத் திரு யாத்திரிகர்

வருகிறசித்திரைமாதம் 18-ந் திகதியன்று ரோமாபுரிபோய்ச் சேரவிருக்கின்ற இலங்கைத் திருயாத்திரிகர்கள் 253 பேரும் அங்குதங்கியிருக்கும் ஒருவாரத்திலும் நான்கு மகாஆலயங்களையும் சந்தித்துப் பாப்பரசரது பேட்டியும் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் அங்குதங்கியிருக்கும்போது சித்திரைமாதம் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்தேறும் ஓர்மகாவைபவத்துக்குச் சமுகமளிக்கும் அதிஷ்டத்தையும் பெற்றுக்கொள்வார்கள். அதாவது, கற்பைப்பாதுகாப்பதற்காகத் தனதுஉயிரைத் தியாகஞ்செய்த முத். மரியகொறற்றி அம்மாள் அன்று அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டப்படுவாள். பரிசுத்தவருடத்தில் நடந்தேறும் முதல்அர்ச்சியசிஷ்டபட்ட திருவைபவம் இதுவாகும்.

### வத்திக்கான் 'ரைம்ஸ்'

உலகில்மகாப்பலமும், செல்வாக்குமுடைய கத்தோலிக்க தினவர்த்தமானியாகிய 'ஒசேர்வாத்தோறே ரோமானே' எனும் வத்திக்கான்பத்திரிகை கத்தோலிக்கஉலகின் "ரைம்ஸ்" என அறியப்படுகிறது. 1939-ம் ஆண்டு இரண்டாவது உலகயுத்தத்துக்குமுன் இதிலே பத்து

( தொடர்ச்சி 8-ம்பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானோபதேச இரண்டாவது பாடத்திட்டம்

## B SYLLABUS

1. இத்திட்டம் ஐந்தாம் வகுப்பிற்குட்பட்ட ஒரு அல்லது இரு ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. (இத்திட்டத்தைக் கைக்கொள்ளவிரும்பும் பாடசாலைகள் எழுத்து மூலம் கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமைக்காரச் சுவாமியாரிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும்.)

2. இத்திட்டத்தின் நோக்கம், வேதசம்பந்தமாக ஒரு சாதாரண கத்தோலிக்கன் அறிந்து அனுசரிக்கவேண்டியனவற்றைப் பாடசாலை விடுமுன் அறியச் செய்தலேயாம்.

3. இத்திட்டம் இருபிரிவாக வகுக்கப்பட்டிருக்கிறது. முதற்பிரிவு புதுநன்மைவாங்க ஆயத்தஞ்செய்யும் சிறுவர்களுக்கும், இரண்டாம்பிரிவு புதுநன்மைவாங்கிய சிறுவர்களுக்கும் உரியது.

4. ஒவ்வொரு பிரிவும் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதற்பிரிவு முடிவில் மூன்று வகுப்புகளுக்குமுரியன முற்றாய் மீட்டு மீட்டு மாணவரால் அறியப்படவேண்டும். இரண்டாம் பிரிவு முடிவில் முதலாம்பிரிவுக்குரியனவும் அந்தந்த வகுப்புகளுக்குரியனவும் விளக்கமாக அறியப்படவேண்டும்.

5. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிக்கப்படவேண்டியன ஐந்துபகுதிகளாக அமைகின்றன. அப்பகுதிகளாவன:—
   1. செபங்கள் 2. வேதசத்தியங்கள 3. சரித்திரங்கள்
   4. கீர்த்தனங்கள் 5. வேதபயிற்சிகள்

6. திட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் நூல்களில் சில ஆசிரியரது உபயோகிப்புக்கும், ஏனையவை மாணவர் உபயோகிப்புக்கும் ஏற்றவை. ஆசிரியர் வைத்திருக்கவேண்டியன * இவ்வடையாளத்தால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

## ஞானோபதேச இரண்டாவது பாடத்திட்டம்

| 1-ம் பிரிவு | | | 2-ம் பிரிவு | | |
|---|---|---|---|---|---|
| பாலர் கீழ்ப்பிரிவு | பாலர் மேற்பிரிவு | 2-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 4-ம் வகுப்பு | 5-ம் வகுப்பு |
| **1. செபங்கள்:-**<br>அர்ச். சிலுவை மந்திரம்<br>பரமண்டல மந்திரம்<br>பிரியதத்தமந்திரம்<br>அர்ச். தமதிரித்துவ ஸ்தோத்திரம்<br>2 மனவல்லயச் செபங்கள் | விசுவாசமந்திரம், அசனத்துக்கு முன், பின் செபங்கள்<br>4 மனவல்லயச் செபங்கள் | பாவசங்கீர்த்தனமந்திரம், உத்தமமனஸ்தாபமந்திரம், விசுவாச, நம்பிக்கை, தேவசிநேக முயற்சிகள்<br>6 மனவல்லயச் செபங்கள் | காலை, மாலைச்செபம், திரிகாலச்செபம், திவ்ய இஸ்பிரீத்துசாந்துவின் மந்திரம், தேவமாதாவின் அடைக்கலச் செபம், களிகூர்ந்த காரணிக்கம். | வியாகுல, மோட்சானந்த காரணிக்கங்கள். | "மகா மதுரம் பொருந்திய...<br>"மிகவும் இரக்கமுள்ள தாயே<br>"அர்ச். சூசையப்பரே எங்கள் ஆபத்துகளில் ...... என்னும் செபங்கள். |
| **2. வேத சத்தியங்கள்:-**<br>ஒரே சர்வேசுரன் மூன்று ஆட்கள், இரண்டாம் ஆளின் மனுஷ அவதாரம்<br>———<br>* சத்தியவேத சித்திரவிளக்கம்<br>* ஆத்துமதரிசனம் | விசுவாசமந்திரத்தின் விளக்கம்<br>———<br>* சத்தியவேத சித்திர விளக்கம்<br>* ஆத்தும தரிசனம் | பாவம், புண்ணியம், பத்துக்கற்பனை, திருச்சபையின் கற்பனைகள், தேவவரப்பிரசாதம், செபம், திவ்விய சற்பிரசாதம் பெற ஆயத்தஞ் செய்தல்.<br>———<br>சின்னக் குறிப்பிடம் 8—15 பிரிவுகள்<br>* சத்தியவேத சித்திர விளக்கம் | இரண்டாம் வகுப்பிற் குரியனவும், யேசுநாதசுவாமியின் பிரசித்த சீவியம், பாடுகள், மரணம், உத்தானம், திவ்விய ஸ்பிரீத்துசாந்துவின் வருகையும்.<br>———<br>சின்னக்குறிப்பிடம் முழுவதும். | செபம், தேவவரப்பிரசாதம், தலையான பாவங்கள், புண்ணியங்கள்.<br>———<br>சின்னக்குறிப்பிடம் முழுவதும் பெரியகுறிப்பிடம் 10-ம் 11-ம் 12-ம் 13-ம் 14-ம் 15-ம் பிரிவுகள். | தேவதிரவிய அனுமானங்களும், அருட்கருவிகளும் (விபரமாக)<br>———<br>பெரியகுறிப்பிடம் 16-ம் பிரிவு முதல் முடிவுவரை.<br>* கத்தோலிக்கு களஞ்சியம் 233-ம் பக்கம்முதல் 330-ம் பக்கம்வரை. |
| **3. சரித்திரங்கள்:-**<br>திவ்விய பாலனின் பிறப்பு<br>———<br>* சத்திய வேதாகம சங்க்ஷேபம் புதிய ஏற்பாடு 5-ம் பாடம் | உலக சிருட்டிப்பு, ஆதாம் ஏவாள்<br>———<br>* சத்திய வேதாகம சங்க்ஷேபம் பழைய ஏற்பாடு 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 5-ம் பாடங்கள் | திருக்குடும்பம் எஜிப்துக்குப் போனது, பாலன் காணமற் போனது, சிறுவர்களும் யேசுநாதசுவாமியும், அப்பங்கள் பலுகிய புதுமை<br>———<br>* சத்திய வேதாகம சங்க்ஷேபம்.<br>புதிய ஏற்பாடு 9-ம் 12-ம் 21-ம் 22-ம் பாடங்கள். | சலப்பிரளயம், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, அப்பங்கள் பலுகிய புதுமைகள், லாசரை உயிர்ப்பித்தது.<br>சத்தியவேதாகம சங்க்ஷேபம்<br>பழைய ஏற்பாடு 10—21 பாடங்கள்.<br>புதிய ஏற்பாடு 23-ம் 24-ம் பாடங்கள். | மோசேஸ், தாவீது, யேசுநாத சுவாமியின் திருப்பாடுகளும் உத்தானமும்.<br>சத்திய வேதாகம சங்க்ஷேபம்<br>பழையஏற்பாடு22-29 பாடங்கள்.<br>புதிய ஏற்பாடு 25-42 பாடங்கள். | புதிய ஏற்பாட்டுச் சம்பவங்கள் விபரமாய்.<br>அர்ச். சின்னமலர், அர்ச். ஞானப்பிரகாசியார் என்பவர்களது சீவிய வரலாறுகள்.<br>சத்திய வேதாகம சங்க்ஷேபம் புதியஏற்பாடு முழுவதும். |
| **4. கீர்த்தனங்கள்:-**<br>* கத். கீர்த்தனை மாலையில் 5-ம் பாடல் "மதுரமான யேசு... | * கத். கீர்த்தனை மாலையில் 77-ம் பாடல் "ஏற்பீர் அம்மா......<br>109-ம் பாடல் "என தருகில்...... | * கத். கீர்த்தனை மாலையில்<br>11-ம் பாடல் "கெட்டுப்.....<br>22-ம் ,, "யேசுநேசிக்...<br>27-ம் ,, "யேசுவே எ... | * கத். கீர்த்தனை மாலையில்<br>18-ம் பாடல் "இஸ்பிரீத்துச்<br>10-ம் ,, "கிருபை செய்.<br>92-ம் ,, "எங்கள் காவ. | * கத். கீர்த்தனை மாலையில்<br>111-ம் பாடல் "இன்றைக்கோ......<br>114-ம் பாடல் "நான் கிறீஸ்து......<br>115-ம் பாடல் "சந்த பாப்பானவர்...... | * கத். கீர்த்தனை மாலையில் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதப் பாடல்கள்.<br>"ஓசலுத்தாறிஸ்... "ஆவே மாறிஸ்......<br>"தாந்தும் ஏர்கோ...... |
| **5. வேதபயிற்சிகள்:**<br>பாலகயேசுவுக்குப் பூ வைத்தல், கோவிலில் வணக்கமாக இருத்தல். | பூச்செண்டு கட்டிச் சொருபங்களுக்கு வைத்தல், திவ்விய சற்பிரசாதநாதருக்கு முழங்கால் மடித்து ஆசாரஞ் செய்தல், தலை குனிதல். | நாட்பூசைக்குப் போதல், பத்தியாய்ப் பூசைகாணுதல் | நாளாந்த கிரிகைகளை ஒப்புக்கொடுத்தல், தனியே தேவநற்கருணை சந்தித்தல். | பத்திக் கூட்டங்களிற் சேருதல், நாளாந்தம் வீட்டிற் செபமாலை சொல்லுதல். | வணக்கமாசம், கோவிற் பெருநாட்களிற் கோவிற் சோடிப்பிற் கலந்துகொள்ளுதல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தவருடச் செபயுத்தத்தின்பேரில்

## திரிகோணமலை மேற்றிராணியாரின்

# தபசுகால ஆயர் நிருபம்.

(முன்தொடர்ச்சி)

இரண்டாவதாக, இம்மேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்கசங்கங்கள், பத்திக்கூட்டங்கள், பத்திச்சங்கங்கள், கத்தோலிக்கமுயற்சிக் கூட்டங்கள் இடத்திலும் இதைக்கேட்டு, இந்தப் பிரதானகாரியத்தில் முழுஆதரவையும் உதவும்படி அவர்களை உற்சாகப்படுத்துகிறோம். அவர்களுடைய முயற்சிகளின் இவ்வருடப் பிரதானநோக்கம் பரிசுத்தவருடத்தின் நோக்கமே— அதாவது: கிறீஸ்துவஊக்கத்தைப்புதுப்பித்தலே. இந்தநோக்கத்தை அடைவதற்கு அவைகளின் அங்கத்தவர்கள் செபத்தில்திருந்தி, தங்கள்சீவியத்தைக் கிறீஸ்துநாதரின்சீவியத்தோடு பொருந்தியதாக்கவேண்டும். இவ்விதமாய்த் தங்கள்முன்மாதிரியாலும், கத்தோலிக்கமுயற்சியாலும் சிதறிப்போனஆடுகளைக் கண்டடையவும், பெலனற்றவர்களுக்கு மனத்திடனைக்கொடுக்கவும் உதவிபுரியலாம்.

நமதுகத்தோலிக்க ஆசிரியர்இடத்திலும் இதைக்கேட்கிறோம். இவர்கள் தங்கள்தொகையினாலும், மேற்றிராசனத்தின் எப்பகுதியிலும் குருமார் செல்லமுடியாத இடங்களில்தானும் பரந்திருப்பதினாலும் அதிகந்தீமையைப் போல் அதிகம்நன்மையும் செய்யக்கூடியநிலையில் இருக்கின்றனர். அநேக கிராமங்களில் இவர்கள்மாத்திரமே கததோலிக்கராய் இருக்கிறபடியால் இவர்கள் தங்கள்சமயத்துக்குப் புகழ்ச்சியைத்தரவும், அல்லது இகழ்ச்சியைத் தரவும் கூடியவர்களாய்இருக்கின்றனர். தேவபராமரிப்பின் வழிவகைகள் மெய்யாகவே அதிசயமானவை. சருவேசுரன் பூமியில் தமதுஇராச்சியம் பரம்புவதை எவ்விதம் தமதுகருவிகளாகிய மனிதர்கையில் ஒப்படைத்திருக்கின்றனர்எனில், இந்தக்கிராமங்களில் இரட்சணிய அலுவல் மூன்று அல்லது இரண்டு அல்லதுஒருஆளின் முயற்சியால் முன்னேறவும் அல்லது தடுக்கப்படவும்கூடும். என்னபொறுப்புள்ளகடமையும், என்னதகுதியான காலமும் தனதுகடமையில் நேர்மையாலும், தனது அதிகாரிகளுக்கு அமைச்சலாலும், தனதுசுத்தசீவியத்தாலும், பிறர்மட்டில் தனதுநிதார்த்தத்தாலும், அன்பினாலும் ஓர்கத்தோலிக்க ஆசிரியர் தனதுதெய்வீக இராசாவின் பெலத்ததுணையாய்இருக்கலாம். இதைவிட ஓர்கத்தோலிக்கஆசிரியர் தனது தொழிலின் தன்மையாலேயே எந்த நேரத்திலும் அளவில்லாத நன்மை செய்யக்கூடும். மாணவர்களின் எதுவும்பதியத்தக்க இளமனங்களில் தான் செலுத்தும் அதிகாரத்தினால் அவர்களைக் கடவுள்பயமும், நேர்மையுமுள்ள தேசமக்களாய் உருவாக்கும் வல்லமையும் அவருக்குஉண்டு. தனது உத்தியோக மதிப்பின்நிமித்தம் ஊர்ச்சனங்களுக்கு நன்மையிலுந்தின்மையிலும் ஓர்வழிகாட்டியாய் இருக்கவுங்கூடும்.

எங்கள்கத்தோலிக்க ஆசிரியர்களே, உங்களிடம் நாம்இதை ஓர்விசேஷவிதமாய்க்கேட்பதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை. நமதுஆண்டவரின்மட்டிலும், அவரதுதிருச்சபையின்மட்டிலும் உங்களுக்குஉள்ள அன்பின்நிமித்தம் உங்களைச் சூழஇருப்பவர்களை உங்கள் முன்மாதிரியாலும் நல்வார்த்தைகளாலும் கிறீஸ்துநாதரிடம் கொண்டுவருவதற்கு உதவிபுரியும்படி பரிசுத்தவருடத்தில் ஓர்மெய்யான கிறீஸ்துவசீவியத்தை நடத்தத் தெண்டியுங்கள்.

கடைசியாய்நாம் இதை எல்லாவிசுவாசிகள்இடமும் கேட்கிறோம். நல்ல கிறீஸ்துவசீவியம் சீவிக்கத் தெண்டிப்பவர்கள்இடத்திலும் இதைக்கேட்கிறோம். யேசுநாதசுவாமியின்பேரிலும் நம்முடையஆசீர்வதிக்கப்பட்ட மாதாவின்பேரிலும் உங்கள்அன்பானது ஆழமுள்ளதாகட்டும். இந்தப்பரிசுத்தயுத்தத்தில் அப்போஸ்தலராயிருங்கள். உங்கள் முன்மாதிரியாலும், செபங்களாலும், பரித்தியாகங்களாலும எமது மேற்றிராசனத்தில் சருவேசுரனுடைய இராச்சியத்தைவளரச்செய்யவும் பெலப்படுத்தவும் நீங்கள் வெகுதுணையாய் இருக்கலாம். உலகநோக்கங்களால்கவரப்பட்டுஉங்கள்ஞானக்கடமைகளில்கவலையில்லாதவர்களாய், கிறீஸ்துநாதரின் அன்பிலும், திருச்சபையின் அன்பிலும் குறைந்தவர்களாய், உங்களுக்காகத் தம்முயிரைக்கொடுத்த, அவரைத்தள்ளிவிட்டுப் பரபாஸ்போல சுயநன்மையையும், பாவஇச்சைகளையும் தெரிந்துகொள்ளும் உங்களிடத்திலும் இதைக்கேட்கின்றோம்.

இது வரப்பிரசாதத்தின் ஓர்வருடம். இவ்வுலகில் உங்கள் சமாதானத்துக்கும், சந்தோஷத்துக்கும்ஆகவும், மறுஉலகில் உங்கள்ஆத்துமஇரட்சணியத்துக்காகவும் இவ்வருடத்தைக் கிறீஸ்துநாதரிடம் முற்றாய்த் திரும்பி வருவதற்கேற்ற ஓர் தருணமாக்கிக் கொள்ளுங்கள். மேலும் முற்றாகத் தவறிப்போன நமதுஞானப்பிள்ளைகள் இடத்திலும் இதை ஆத்திரத்தோடு கேட்கின்றோம். உங்களுக்காகவே ஒவ்வொரு சாதியிலும், தேசத்திலுமுள்ள இலட்சக்கணக்கானோர் மன்றாடுகின்றனர். நமதுபரிசுத்தபிதா இந்தப்பரிசுத்தவருடம் ஓர்பெரும் மனந்திரும்புதலையும் மன்னிப்பையும்உடைய ஓர் வருடமாய் இருக்கவேண்டுமென்று மன்றாடும்பொழுது உங்களையேநினைக்கின்றனர். உங்களிற்சிலர் ஒழுக்கமானசீவியம் இல்லாயல் விழுந்துவிட்டீர்கள். வேறுசிலர் சரீரநன்மைக்காகவும், இன்னுஞ்சிலர் பெருமையாலும் உங்கள்விசுவாசத்தை இழந்தீர்கள். எந்தக்காரணத்தின்நிமித்தம் நீங்கள்தவறிப்போனாலும் அந்தக்காரணம் உங்கள்நீதிபதியின்முன் நீங்கள்நிற்கும் அந்தநாளில் மதிப்பற்றதாய்இருக்கும். இப்போது இருக்கும்நிலையில் நீங்கள் அந்தநாளிலும் இருப்பீர்களேயாகில் நமதுஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட உங்கள்ஆத்துமங்களை முற்றாய் இழந்துவிடுவீர்கள். இந்தத்தீமை சம்பவியாதபடி நேரகாலத்தோடே உங்களுடையபிதாவின்வீட்டுக்குத் திரும்பி வரும்படி நமதுஇரக்கமுள்ள இரட்சகரின்பேரால் வேண்டுகின்றோம். நீங்கள் இலேசாய்த் திரும்பிவருவதற்காக இந்தப்பரிசுத்தவருடத்தில் பிரசித்த தண்டனைகளை விலக்கிவைக்கும்படி கட்டளையிடுகின்றோம். யேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தபிள்ளைகளே, நீங்கள்சருவேசுரனிடம் திரும்பிவருதலைச் செய்துமுடிப்பதற்கு நாம்நமது வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவில்லை. நீங்கள்அவைகளை ஒருபோதும்கேளாமலும் இருக்கலாம். உங்களுடைய மன்னிப்புக்காகவும் நீங்கள் திரும்பிவருவதற்காகவும் இந்தப்பரிசுத்தவருடத்தின் வரப்பிரசாதங்களிலும் இலட்சக்கணக்கானோரின் செபங்களிலும் நம்பிக்கை வைக்கிறோம்.

(தொடரும்)

---

❁ யூகோசிலேவியாவின் குட்டிச் சர்வாதிகாரியான மாஷல் ரிற்றோ என்பவன் அங்கே தனது ஆட்சிகாலத்தில் 4,313 கோவில்களை அழித்திருப்பதாகவும், ஏறக்குறைய 1,000 கத்தோலிக்க குருமாரைச் சிறைப்படுத்தியிருப்பதாகவும் வியன்னா நகர கத்தோலிக்க பிரசுர சேவாசங்கம் சென்ற மாசிமாதம் 13-ந்திகதி அறிவித்திருக்கின்றது.

# தமிழ் ஞானஒடுக்கம்

கொழும்பு, கொட்டாஞ்சேனை அர்ச். லூசியா மேற்றிராசனஆலயத்தில் நடைபெறும் வருடாந்ததபசுகால தமிழ் ஞானஒடுக்கம் இம்மாதம் 19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும்

வண. L. J. அகுஸ்தீன் சுவாமி அவர்கள்
தியான பிரசங்கங்கள் நிகழ்த்துவார்

"மனிதன் உலகம் முழுவதையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டபோதிலும், தன் ஆத்துமத்தை இழந்துபோவானாகில் அதனால் என்னபயன்." தமிழ்க்கத்தோலிக்க மக்களே, வருடத்தில் ஒருமுறை உங்களுக்குக்கிடைக்கும் இந்தமேலான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள்ஆத்தும நிலமையைச் சீர்ப்படுத்த இந்தஞானஒடுக்கத்துக்குத் தவறாமல் வாருங்கள்.

நிகழ்ச்சி அட்டவணை

19-ந்திகதி மாலை 6-30 மணி, செபமாலை, தியானப்பிரசங்கம், திவ்விய நற்கருணை ஆசீர்வாதம்.

தினமும் காலை 5-15 மணி, காலைச் செபம், ஞானபோதகம், திவ்வியபூசை

மாலை 7-00 மணி, சிலுவைப்பாதை, தியானப்பிரசங்கம், திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்.

26-ந்திகதி காலை 5-00 மணி, முதல்பூசை.

காலை 7-30 மணி, இரண்டாம்பூசை, ஞானஒடுக்கம்நடத்திய குருவானவரைக் கண்டுகொள்ளுதல்.

தினசரி காலை தியானப்பிரசங்கமும், திவ்வியபூசையும் கொச்சிக்கடை அர்ச. அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்.

G. CHAULIEU
கட்டளைக்குரவர், கொட்டாஞ்சேனை

தயவுசெய்து உங்கள்சிநேகிதரையும், உறவினரையும் கூட்டிக்கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

தபசுகாலத்தின்

## 4-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு. 6: 1—15)

அக்காலத்தில் யேசுநாதர் திபேரியா நகரத்துக் கடலாகிய கலிலேயா நாட்டுக்கடலைக் கடந்துபோனார். திரளான சனக்கும்பல், அவர் வியாதிக்காரருக்குச் செய்துவரும் அற்புதங்களைக் கண்டிருந்தமையால் அவரைப்பின்சென்றது. ஆகையால் யேசுநாதர் ஓர் மலைமீது ஏறி அங்கே தம்முடைய சீஷர்களோடு உட்கார்ந்திருந்தார். அப்படியிருக்க யூதர்களுடைய திருநாளாகிய பாஸ்காப்பண்டிகை சமீபித்திருந்தது. அப்போது யேசுநாதர் தம்முடைய கண்களை ஏறெடுத்து, மிகுதியான சனக்கும்பல் தம்மிடத்தில் வந்திருக்கிறதைக்கண்டு, பிலிப்பென்பவரை நோக்கி: இவர்கள் உண்ணும்படி எங்கேயிருந்து அப்பங்களைச் சம்பாதிப்போம்? என்றார். ஆனால், அவரைச் சோதிக்க இப்படிச்சொன்னார். ஏனெனில், தாம்செய்ய இருப்பதைத் தாமே அறிந்திருந்தார். பிலிப்பு அவருக்கு மறுமொழியாக: இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சமாவது சாப்பிடுவதற்கு இருநூறு தெனியர்பெறும் அப்பங்கள் இவர்களுக்குப் போதாதே என்றார். அப்பொழுது அவருடைய சீஷர்களில் ஒருவரும், சீமோன் என்னும் இராயப்பருடைய சகோதரருமாகிய பெலவேந்திரர் அவரைநோக்கி: வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தும், மீன்கள் இரண்டும் வைத்திருக்கிற ஓர்பையன் இங்கே இருக்கிறான். ஆனால், இத்தனைபேர்களுக்கு அவைகள் எம்மாத்திரம்? என்றார். யேசுநாதர்: மனிதரைப்பந்தியமரச் செய்யுங்கள் என்றார். அவ்விடத்தில் அதிகபுல்லிருந்தது. அங்ஙனம் ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்கள் பந்திஅமர்ந்தார்கள். அப்பொழுது யேசுநாதர் அப்பங்களை எடுத்து நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தினபின்பு, பந்தியில் அமர்ந்தவர்களுக்கு அவைகளைப்பரிமாறினார். மீன்களிலும் தங்களுக்கு இஷ்டமான மட்டும் அவர்களுக்குப் பரிமாறினார். அவர்கள் திருப்தியடைந்தபின், அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: மீதியான துண்டுகள் சேதமாகாதபடிக்கு அவைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். ஆதலால் வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் புசித்து மீதியான துண்டுகளைச் சேகரித்துப் பன்னிரண்டு கூடைகளில்நிரப்பினார்கள். யேசுநாதர் செய்தருளின அற்புதத்தை அம்மனிதர் கண்டபோது: மெய்யாகவே உலகத்தில் வரவிருக்கிற தீர்க்கதரிசி இவர்தான் என்றார்கள். ஆகையால், அவர்கள் தம்மை இராசாவாக்கும்படி பலவந்தமாய்ப்பிடிக்க வரப்போகிறார்களென்று யேசுநாதர் அறிந்து மறுபடியும் தனியே மலையின் மேல்ஏறி விலகிப்போனார்.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1950

| | | |
|---|---|---|
| வெ | 17 | அர்ச். பத்திரிசியார், மே. |
| சனி | 18 | அர்ச்.எருசலேம் சிறிலப்பர்,மே. வேதபா. |
| ஞா | 19 | தபசுகாலத்தின் 4-ம்ஞாயிறு—கன்னிமரியாயின் பத்தாவான அர்ச். சூசையப்பர், சாதாரண திருச்சபையின் பாதுகாவலர். |
| திங் | 20 | அர்ச். சுவக்கீன், து. |
| செவ் | 21 | அர்ச். ஆசீர்வாதப்பர். ம. |
| புத | 22 | அர்ச். கத்தரீனம்மாள், க. |
| வியா | 23 | அர்ச். விக்தோரப்பர், வே. |


சத்தியவேத

# பாதுகாவலன்

1950-ம் ஆண்டு

பங்குனிமாதம் 16–ந் திகதி


## சமாதான செபப் படையெழுச்சி

இரண்டாவது உலகயுத்தம் முடிந்து ஐந்துவருடங்கள்சென்றும் அத்தாலே உலகமக்களுக்குப் பலவழியாலும் உண்டான கஷ்டநஷ்டங்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை. சீரழிந்தநாடுகள் இன்னும் சீரடைந்தபாடில்லை. அந்தயுத்தகலவரம் மக்களின் மனதினின்றும் இன்றுமே அகன்றதாயில்லை. பொதுவிலே கூறுமிடத்து, பெயரளவிலேதான்யுத்தம்முடிந்ததெனலாம். உலகில்பசியும், பிணியும், பகையும், யுத்தபயமும்இல்லாத நாடே இல்லையெனலாம். சமாதானத்தைநிலைநாட்டுமாறு நிறுவப்பெற்ற ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலேயே அமைதி காணப்படவில்லையாயின்—சமாதானப்போக்கைக் கண்டுகொள்வது வல்லையாயின் பின்னர் அவைகளைக் காணுவதுஎங்கே? கண்டுகொள்வது எங்கே? சோவியற்ருஷியாவின் மிரட்டல்யுத்தமும், அமெரிக்காவின் யுத்தஎதிர்ப்புத் திட்டமும்,அரசுகளின் இராணுவசெலவும் தூமகேதுவின் வாலைப்போன்று வளர்ந்துகொண்டே வருகின்றன. அதனால் சர்வதேசநிலை வரவர மிகமோசமாகிக்கொண்டே வருகின்றது. இந்நிலைமையில் மூன்ருவதுஉலகயுத்தம் எங்கே, எப்போது தொடங்குமென்று பலரும் வினவிக்கொள்வது அதிசயமன்று. ஆனால், இதற்குத் தகுந்த விடைபகர்வார் எவருமேயில்லை. என்ருலும் உண்மைகளை ஆராய்ந்து அணுக்குண்டிலும் ஆயிரமடங்கு அழிவுக்கேதுவான சலவாயுக்குண்டின் அச்சத்தையும், சீனமுதலாம் கீழ்தேசங்களிலே சோவியற் அச்சுறுத்தலையும் விடுத்து, ஐரோப்பாவை நோக்குவோம். ருஷியா கட்டளைபிறப்பித்துச் சிறிதுவேளையில், இருநூறுபடைவகுப்புகளைக்கொண்ட பிரமாண்டமான சேனைசமுத்திரம் ஒன்று மேற்குஐரோப்பாமீது படையெடுத்துப் பயங்கரயுத்தத்தை விளைக்கக்கூடிய அத்தனை மகாப்பலம்பொருந்தியதாய்க் காணப்படுகின்றது. அதன் கைத்தொழில்கள் இராணுவ போராயுதங்கள் செய்துகுவிக்கும் கைத்தொழில்களாய்க் காட்சியளிக்கின்றன. இந்த ஆயத்தங்களுடன் ருஷியாவின் கமயூனிஸ்த தோழநாடுகளான போலாந்து, பல்கேரியா, ருமேனியா, செக்கோசிலோவாகியா முதலாம்நாடுகளிலே சோவியற் ஜெனறல்களின் தலைமையிலுள்ள இராணுவங்களும், சோவியற்ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஜேர்மனியிலே 'சனப்பொலிஸ் பட்டாளம்' ஒன்றைத்தாங்கிகள், பீரங்கிகள், குண்டுகளுடன் 3,60,000 வீரர்களை அடங்கியதாய் அதுகொண்டிருக்கும் இராணுவ பலமும்,கிழக்குஐரோப்பாவிலே 30முதல் 40 வரையில் அதுநிறுத்திவைத்திருக்கும்சோவியற்படைவகுப்புகளும் ஒருங்கே திரளுமிடத்து ருஷியாவின்பலம் பலமடங்காகுமன்ருே!

ருஷியாவின் இந்தநிலைமையிலே மேற்கு ஐரோப்பாவில் அதனைஎதிர்த்துப் போராடவேண்டிய பிரான்ஸ், பிரித்தானி, பெல்ஜியம், நெதர்லாந்து, மேற்குஜேர்மனி ஆகியாம் நாடுகளின் இன்றையநிலைபரம் என்ன? இவற்றில் முக்கியமான பிரான்சும, பிரித்தானியும் பரிதாபகரமான பொருளாதார நெருக்கடிக்குள்ளாய்க்கெட்டார் தழையாரோ, கேடொருகால் நீங்காதோவென்று நெட்டுயிர்த்து அமெரிக்காவையே நம்பியிருக்கின்றன. பணமோ, ஆயுதபலமோ, உணவுதானுமோ அதனிடமிருந்து பெறவேண்டியநிலையில் இருக்கின்றன. மேற்குஐரோப்பாவிலே ருஷியாவின் படையெடுப்பை எதிர்த்துநின்று தடுத்துவிடக்கூடிய தனதுநிரந்தரமான பெருஞ்சேனைஒன்றை அமெரிக்காகொண்டுபோய் அங்குநிறுத்திவைக்குமென்று ஆர்தானும் எதிர்பார்க்கமுடியுமா? ஆதலால் மேற்குஐரோப்பிய நாடுகளின் பலமற்றநிலைமையிலே ருஷியா யுத்தசந்நதங்கொண்டெழுந்தால் அதன்சத்துருநாடுகளெல்லாம் சவியிழந்து சரணடைந்துவிடுமென்று சொல்வது சாத்தியப்படாதா? எனினும், ருஷியாவிலும் சோவியற்அரசுக்குச் சத்துராதிகள் இருக்கின்ருர்கள். அதன்தோழநாடுகளும் அரசியலாலும், கொள்கையாலும், பயங்கரஅடக்குமுறையாலும் இரண்டுபட்டுப்போய்க் கிடக்கின்றன. மேற்குஐரோப்பிய நாடுகளிலே வேலைநிறுத்தங்கள், சதிமானங்கள், பலாத்காரச்செயல்கள் நடத்தி யாவையும்பாழாக்கிவருகின்ற கம்யூனிஸ்தபைசாசங்கள் ருஷியா படையெடுக்குமானல் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பார்களா? அரசாங்கத்துக்குமாருய் இன்னும்பலஅழிவு வேலைகளைச்செய்யமுயல்வார்கள் அன்ருே! ருஷியாதொடக்கும் யுத்தம் எப்படிநடந்தபோதிலும் பணத்திலும், பலத்திலும்மிக்க அமெரிக்கவரசு கடைசிமட்டும் எதிர்த்துநின்று ஒருகை பார்த்துத்தான் தீரும் அன்ருே! ஆகவே மூன்ருவது உலகயுத்தம்ஒன்று நிகழுமானல் அதுசர்வசங்காரயுத்தமாய், நாடுகளெங்கும் இரத்தஆறு பெருக்கெடுத்துப் பாயும் மகாகொடியதோர் யுத்தமாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆதலால் இந்தப் பயங்கர யுத்தத்தை நிறுத்துவைக்குந்திறமை மனிதவல்லபத்துக்குஇல்லையென்றுசொல்லவேண்டியதில்லை. அதனல் தேவவல்லபத்தைத் தேடவேண்டிய அவசியத்தை உணர்ந்துகொண்ட பரிசுத்தபாப்பரசர் திருப்பாடுகளின் ஞாயிறன்று சமாதான செபப்படையெழுச்சி ஒன்றைத் தாமே முன்னணியில்நின்று தலைமைவகித்து நடத்தவிருக்கின்ருர். அதில் கத்தோலிக்க உலகமுழுவதும் கலந்துகொள்ளவேண்டுமெனப் பெரிதும் ஆர்வத்துடன் கேட்டிருக்கின்ருர். ஆதலால், அவரது குரலொலிக்குச் செவிசாய்த்து இந்தச் செபப்படையெழுச்சியில் நாமும் மனேற்சாகமாகச் சேர்ந்து உலகசமாதானத்துக்காகத்தேவ அருளை இரந்துகொள்வோமாக!

## சுதேச வர்த்தமானம்

### பதின்மூன்று செவ்வாய்ப்பத்தி

அர்ச். அந்தோனியாருக்குத்தோத்திரமாக அவர்திருநாளுக்குமுன் அனுசரிக்கப்படும் பதின்மூன்றுசெவ்வாய்க்கிழமைப்பத்தியானது நிகழும்பங்குனி மாதம் 21-ந்திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அவர் திருநாளாகிய வருகிற ஆனிமாதம் 13-ந்திகதி செவ்வாய்க்கிழமை முடிகிறதென்பதை அவரின்பக்தர்களுக்கெல்லாம் ஞாபகப்படுத்துகின்ருேம்.

### சங்கீதப் போட்டிப் பரிசில்

நிகழும் 5-3-50 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சுகாதார—ஸ்தலதாபன மந்திரியார் திரு. பண்டாரநாயக அவர்கட்கு யாழ்ப்பாண நகரசங்க மண்டபத்தில் நிகழ்ந்த வரவேற்பின்போது நடந்த சங்கீதவிழாவில், வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்கள் பரிபாலனத்தின்கீழ் நடைபெறும் நாவாந்துறைச் சனசமூகநிலையம் கோலாட்டத்திலே வடமாகாணத்தில் இரண்டாவதாகவும், பட்டண எல்லையுள் கோலாட்டத்தில் முதலாவதாகவும், ஊதாரிப்பிள்ளை உவமை நாடகத்தில் முதலாவதாகவும் வெற்றிபெற்று நற்சாட்சிப்பத்திரங்கள் பெற்றிருப்பதாக அறிந்து சந்தோஷமானேம்.

### மோட்டர்கார் விபத்து

யாழ்ப்பாணநகரசங்க அங்கத்தவர்களில் ஒருவரான திரு. ரி. எஸ். துரைராஜா அவர்கள் உடுவிலிலே சென்ற வெள்ளிக்கிழமைஇரவு ஓர்கார்விபத்துக்குள்ளாயினர். கார் ஓர்முடக்கில் திரும்பியபோது புரண்டுபோயிற்று. திரு. துரைராசா யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பெற்று அங்கே அவசரதுவலதுகரம் வெட்டிச் சிகிச்சைசெய்யப்படலாயிற்று.

### மாஜிமந்திரியின் மரணம்

முன்னர் கண்டிநகர்ப்பிரதிநிதியாயும் கைத்தொழில்மந்திரியாயும் இருந்த திரு. ஜோட்ஸ் ஈ. டி சில்வா சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திடீரெனக் காலஞ்செல்லலாயினர். அன்று இவர் பேராதனையிலே 'கொல்வ்' விளையாடிவிட்டு வந்ததும், காத்திராப்பிரகாரம் மார்படைப்பினல் இறந்துபோயினர். மரிக்கும்போது வயசு 72. இவர் 30 வருடகாலம் அரசியலில் ஈடுபட்டு 20 வருடங்களுக்குமேல் கண்டி நகரசங்கத்தில் ஓர் அங்கத்தவராய்இருந்தார். இவர்முதலாவது அரசாங்கசபையில் ஓர் அங்கத்தவராகத் தெரியப்பெற்றுச் சுகாதாரமந்திரியாயினர். பாராளுமன்றத்திலே கண்டிப்பிரதிநிதியாகத் தெரியப்பெற்றுக் கைத்தொழில்-கடற்தொழில் மந்திரியாக நியமனம்பெற்ருரெனினும் சுப்பிறீங்கோட்டிலே இவரது தேர்தல் முறைகேடானதென்று நிரூபிக்கப்பட்டமையால் இப்பதவிகளையும் இழந்துபோயினர். இலங்கை முழுவதிலும் கிராமஆஸ்பத்திரி, பிரசவவிடுதிகள் அமைக்கும் இயக்கத்தை ஆரம்பித்தவர் இவரே.

### ஆகாயத் தபாற்சேவை

'ஏயர்சிலோன்' விமானங்கள் புறப்படும்நேரங்களிலே இம்மாசம் 13-ந்திகதிமுதல் சிலமாறுதல்கள் ஏற்பட்டிருப்பதால் அன்றுமுதல் கொழும்புக்கும், யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள கந்தோர்களுக்குமிடையில் ஆகாயவிமானத்தபால்·சேவையில் சிலமாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணக்குடாநாட்டுத்தபால்கள் வெள்ளி, ஞாயிறு நீங்கலாக ஏனையநாட்களில் இரத்மலானையிலிருந்து தினமும் காலை 10 மணிக்குப் புறப்படும்விமானத்தில் அனுப்பிவைக்கப்படும். யாழ்ப்பாணக்குடாநாட்டிலிருந்து கொழும்புத்தபால்கள் வெள்ளி, சனிநீங்கலாக ஏனையநாட்களிலே தினமும்பிற்பகல் 3-25 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும்விமானத்தில் அனுப்பிவைக்கப்படும். யாழ்ப்பாணநகர்த் தபால்மட்டும் ஞாயிறு நீங்கலாகத் தினமும் காலை 10-45 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும்விமானத்தில் கொழும்புக்கு அனுப்பப்பெற்று அங்கே பிற்பகல் 2 மணிக்கு ஆட்களுக்குக் கொடுக்கப்படும்.

### மத்தியவங்கியின் கவர்னர்

நவமாக அமைக்கப்படவிருக்கின்ற இலங்கை மத்தியவங்கியின் கவர்னராகப் பிரதமநீதியரசராகவிருந்து இளைப்பாறுகின்ற சேர் ஆர்தர் விஜெயவர்த்தன அவர்கள் நியமனஞ்செய்யப்படவிருக்கின்ருர். இவர் கடைசிமுறையாக நாளைவெள்ளிக்கிழமை சுப்பிறீங்கோட் நீதாசனத்தில் அமருவார். அப்போது இவருக்குப் பிரியாவிடைப் பேச்சுகள் நிகழ்த்தப்படவிருக்கின்றன. இவர் பன்னிருவருடம் சுப்பிறீங்கோட் நீதியரசராய்இருந்துவரலானர். மத்தியவங்கி உத்தியோகமுறையில் திறக்கப்படும்நாள் இன்னமும் குறிக்கப்படவில்லை.

### சுகாதாரவாரம்

அகில-இலங்கைச் சுகாதாரவாரம் இவ்வருடம் வருகிறஆடிமாதம் 16-ந்திகதிமுதல் 22-ந்திகதிவரையில் அநுசரிக்கப்படவிருக்கிறது. அத்துடன் 1946-ம்ஆண்டு ஆடிமாதம் 22-ந்திகதி 61 தேசங்கள்சேர்ந்து உலகசுகாதாரஸ்தாபனத்தை அமைத்துக் கையொப்பமிட்டதன் ஞாபகார்த்தமாக ஆடிமாசம் 22-ந்திகதி உலகசுகாதாரதினமாக அனுசரிக்கப்படும்.

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

இம்மாசம் 18-ந்திகதி சனிக்கிழமை காலை 11 மணியளவில், சென்சாள்ஸ் பாடசாலையில் ஆசிரியர் ஐக்கியசிக்கனச்சங்கம் ( *Thrift Society* ) ஒன்று தொடங்குவதற்காக ஓர் ஆரம்பகூட்டம் நடைபெறும். இச்சங்கத்திற்சேர்ந்து கொள்ள விரும்புவோர் மேற்படிகூட்டத்துக்குச் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேம்.

T. A. J. Mathuranayagam
Actg. Gen. Manager,
R. C. Schools

Jaffna, 8-3-50.

---

❀ இந்தோனேஷிய ஐக்கியநாடுகளென அறியப்படுகின்ற புதியகுடியரசுத் தலைநகரின் நாமம் ஜகாட்ரா என்பது. உலாந்தஅரசு இந்தோனேஷியாவுக்குச் சுதந்திரம் அருளுமுன் அந்நகரின்நாமம் பற்ருவியா என வழங்கிவந்தது. 350 வருடகாலமாக இருந்துவந்தநாமம் "விசேஷபட்டணம்" என அர்த்தங்கொண்ட ஜகாட்ரா என மாற்றப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவ வளனே! நன்மரணம் அருள்வாய்

"ஞானி"

விருத்தம்

I

மன்னவன் தவிது கோத்திர விளக்கே!
மரியதாய் பிரியபத் தாவே!
பொன்னுல கேந்து மன்னவன் தன்னைப்
பூங்கரத் தேந்திய புனிதா!
மின்னலுங் கனவும் அன்னவிவ் வாழ்வை
மெய்யென நம்பிஏ மாந்தே
இன்னலிங் குற்றேம் செய்பிழை பொறுத்து
எமக்குநல் மரணமே அருள்வாய்!

II

மதுமலர் கரத்தில் ஏந்துமா தவனே!
வளனெலாம் ஒளிர்திரு வடிவே!
சதமென உலக. மாயையிற் சிக்கித்
தனிவழி மாறிய மான்போல்
பதைபதைத் தின்னற் படுகடல் வீழ்ந்தேம்
பாதையோ வாதையா யிற்று
துதிவளர் நினது சேவடிவந் தோம்
தூயநன் மரணமே அருள்வாய்!

III

நாடியே தேவன் மனுக்குலம் மீட்க
நண்ணிய காலையிற் தங்க
வீடின்றி வாடு போதிலும் அந்த
வெய்யஏ ரோதனே செய்யக்
கேடினை நினைத்த போதிலும் உதவி
கீழ்ப்படிந் தியற்றினேய்! கண்கள்
மூடியே உலகைத் துறந்திடும் போது
மூந்துநன் மரணமே அருள்வாய்!

IV

முத்தொழில் வல்ல முதல்வனை யிங்கே
முப்பது வருஷமுங் காத்தாய்
எத்தொழில் தானுஞ் செயவறி யாத
ஏழையை யொருகண மேனுஞ்
சித்தமே வைத்துக் காத்திட லரிதோ!
செல்வனே! நல்வள நாதா!
நித்தமுந் தொழுதோம் அந்திம வேளை
நிலவுநன் மரணமே அருள்வாய்

V

கொடைக்குண மில்லாக் கொடியவன் குரூரன்
கொடும்பழி காரனே பொல்லா
நடைக்கொரு ராசன் நம்பினர் துரோகன்
நஞ்சினுங் கொடியபாழ் அலகைப்
படைக்கொரு சேனை பதியெனப் பிறந்த
பாவியை அணைப்பவ ராரோ
அடைக்கல முனியே! அம்மையே! அப்பா!
அரசே!நன் மரணமே யருள்வாய்

## விசேஷ அறிவித்தல்

கொழும்புநகரிலுள்ள மெசேர்ஸ் ஹோர் அன் கம்பெனியார் தங்கள் கட்டிடவேலைப் பிரதிநிதியாகிய திரு. கே. எஸ். சான்டேர்ஸ் அவர்கள் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கும் 1 மணிக்குமிடையிலும், பிற்பகல் 5 மணிக்கும் 6 மணிக்குமிடையிலும் கட்டிடவியாபார சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்கு யாழ்ப்பாண றெஸ்ற் ஹவுஸில் தங்கியிருப்பாரென்றும், அவருடைய ஆலோசனை இலவசமாகவும், எவ்விதகடமைப்பாடுமின்றியும் அருளப்படுமென்றும் சந்தோஷத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள்.

---

❀ லண்டன் மிருககாட்சிச்சாலையானது உலகின் மகாப்பெரும் விஷசர்ப்பங்களில் ஒன்றான 'ரைகர்' எனும் பாம்பைச் சமீபத்திலே ஆஸ்திரேலியாவிலிருந்து பெற்றிருக்கின்றது. இது ஆகாயவிமானம் ஒன்றில் அங்கு கொண்டுபோகப்படும்வழியிலே இருபது குட்டிகளை ஈன்றது. ஆனால் லண்டன்நகர் விமானநிலையம்போய்ச் சேருவதற்கிடையில் அத்தனை குட்டிகளும் இறந்துபோயின. இப்பாம்பு மனிதரை வலியச்சென்று சருவுவதில் விசேஷப்பட்டதாகும்.

## மரணசங்கதி

ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார்கோவில் மூகாமைக்காரருள் ஒருவரும், கொழும்பில் ஹெர்கியுல்ஸ் மாஸ்றர் அற்றெண்டன்ட் பகுதியில் சிறுங்குவாக அமர்ந்திருப்பவருமான திரு. B. சூசைப்பிள்ளையின் பிரியபத்தினியும், கொழும்பு ரேகில் கடமைபார்க்கும் திரு. S.B. நிச்சுவேயின் மாமியாரும், ஊர்காவற்றுறைப் பட்டினசங்க அங்கத்தவர் திரு. S. அந்தோனிசாமியின் சகோதரியுமான அந்தோனியாப்பிள்ளை இராசமுத்து காத்திராப்பிரகாரம நோய்கண்டு அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்று இம்மாதம் 7-ந் திகதி செவ்வாய்க்கிழமை தனது 51-ம் வயசில் காலஞ்செல்லலாயினு. இவ ஓர் நற்குணசீலியாய், ஆலயவழிபாடு, இல்லறதருமம் ஆதியன திறம்பட நடத்திவந்தவ. மறுநாட்சாயந்தரம் பல இடங்களிலுமிருந்து வந்துகூடிய இனசனர், சிநேகிதர்மத்தியில், அழகிய பேழையில்வைத்த பிரேதவண்டியை ஓர் வெண்பரி இழுத்துச்செல்ல, சங். கன்னியாஸ்திரிமாரும், தங்கள் விருதுகொடியுடன் செபமாலைமாதாவின் கூட்டப்பெண்களும் வேண்டுதல்செய்து முன்னேசெல்லச் சேமக்காலையை அடைந்ததும் வண. N. [illegible]

# துணை ஆயருக்கு : : : : : வரவேற்பு

### நெடுந்தீவு

யாழ்நகர்த் துணைமேற்றிராணிஆண்டவர்அவர்கள் 10-3-50-இல் நெடுந்தீவுக்குத் தரிசனை தர நேர்ந்தது. அன்று இவ்வூர்வாசிகள் சமய பேதமின்றிச் சகோதரத்துவமான்மையில் அவரை வரவேற்றனர். துறைமுக அலங்கரிப்புமண்டபத்தில் இவ்வூர்த் தலைமையாளரும், பிரமுகர்களும், ஆசிரியர்களும், பாடசாலைப் பிள்ளைகளும், பெற்றோரும், மற்றோரும், சாரணரும் மேற்றிராணியாரை வரவேற்று ஆடம்பரவரிசைகளுடன் அழைதலச்சென்ற முறை மிகவும் பாராட்டத்தக்கதாயிருந்தது.

உபசாரணைமண்டபத்திலே வரவேற்புச்சபைத்தலைவர் திரு. யோஸ் சின்னத்துரைஅவர்கள் ஆண்டவருக்கு மலர்மாலை சூட்டி வரவேற்பளித்தார். திரு. V. S. யேம்ஸ்அவர்கள் நெடுந்தீவுமக்களின்பேரால் வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்தில் இரு கோரிக்கைகள் குறிக்கப்பட்டிருந்தன. ஒன்று, இவ்வூரில் நெடுங்காலமாகத் திருவூழியஞ்செய்துவரும் வண. கட்டளைச்சுவாமியார் சுகத்தாழ்வுற்றிருப்பதாலும், கிறீஸ்தவர்தொகையும், கோவிலும், பாடசாலை நிருவாகமும் அவரது தனிப்பட்ட தொண்டுக்கு அபாரமானதாய் இருப்பதாலும், ஒரு நிரந்தரமான உதவிக்குருவரைத் தரவேண்டுமென்பது. மற்றது, கத்தோலிக்க வித்தியார்த்திகளின் ஆங்கிலக் கல்விக்கு ஏற்றவழிவகைகளைச் செய்துவைக்க வேண்டுமென்பது. தொடர்ந்து ஆசிரியர் திரு. S. சின்னப்புநாயகம் அவர்கள் இந்தக் கோரிக்கைகளின் அத்தியாவசியத்தைக் குறித்து விரித்துக்கூறி, மறந்து கைவிடப்பட்டிருக்கும் விஷயங்கள்மட்டிற் கடலிற் பழிசுமத்தி நின்றார். திரு. G. பெனடிக்ற் ஆசிரியர் சரித்திர ஆராய்ச்சியில் இறங்கி, புராதன தேவாலயமாகிய அர்ச். சவேரியார்கோவிலைத் திரும்பக் கட்டியெழுப்புவதற்கு ஆவனசெய்து தரவேண்டுமென வற்புறுத்திநின்றார்.

ஈற்றில் ஆண்டவர்அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறி, வாசித்துக்காட்டிய இருகோரிக்கைகளினதும் அவசியத்தைத் தாம் ஏற்கனவே அறிந்திருப்பதாகவும் அவற்றில் முதலாம் கோரிக்கையைப் பற்றி மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களிடம் அறிவித்தபோது அனுகூலமானபதில் கிடைத்ததாகவும் தெரிவித்தார். ஆங்கிலக்கல்விக்குவசதியளிப்பதற்காகத் தாம்செய்திருந்ததிட்டம்,, வெள்ளையறிக்கை முடிவில் அனுகூலமாய் அமையும் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து பேசியபோது கிறீஸ்தவருக்கிருக்கவேண்டிய பிறர்சிநேகப் பண்பைக் குறித்துப் புத்திபுகட்டினார். முடிவில், வாழ்த்துப்பாக்களுடன் வரவேற்புஉபசாரணை முற்றிற்று.—நிருபர்.

---

வண. S. இம்மனுவேல், வண. S. நீக்கிலாப்பிள்ளை எனும் குரவர்கள் துக்க கீதம்பாடி அந்திமதிருச்சடங்கு நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, புதியகல்லறையில் அடக்கம் நடந்தேறியது. இவரைப்பிரிந்து துன்புறும் கணவன், பிள்ளைகள், மருகர், சகோதரங்களுடன் நானும் அனுதாபப்படுகிறேன்.

R. I. P.

S. லீனஸ்.

---

சமயங்களை எதிர்த்து நடத்தப்படும் கம்மியூனிஸ்த போராட்டத்துக்கு நேரே துணைச்செய்வதற்கென்று போலாந்தின் தலைப்பட்டணமாகிய வார்சோநகரிலே சோவியற்நிபுணர்கள் ஓர் மத்தியநிலையத்தை வகுத்துக்கொண்டிருக்கின்றனர். 'ஒலிஜின்போம்' என அறியப்படுகின்ற இது ஏனையகம்மியூனிஸ்த பிரசார நிலையங்களுடன் சேராது ஓர் தனிப்பட்ட சுதந்திரமுடைய ஸ்தாபனமாய் இருந்துவரும். இரும்புத்திரைக்குப் பின்னுலுள்ள நாடுகளிலெல்லாம் இது தன்தூதர்களைக் கொண்டிருக்கிறது. மேல்நாடுகளுக்கு அனுப்புவதற்கும் தனது தூதர்களைக் கூட்டங்கூட்டமாக அணிவகுத்துவருகின்றது. இத்தூதர்கள் குருமடங்களிலிருந்து கலைக்கப்பட்டவர்கள், 'கொம்சொமல்' எனப்படும் யுவர்கள் ஸ்தாபனத்தின் நாஸ்திக ஆவேசங்கொண்ட யுவர்கள், வேவுகாரர்கள் மத்தியிலிருந்து தெரியப்படுகிறார்கள். மூந்த இவர்கள் சோதனை செய்யப்பெற்ற பின்னரே லாத்வியா, ஊக்றேயின், ஹங்கேரி, ருமேனியா எனும் நாடுகளிலிருக்கும் நான்கு பாடசாலைகளில் ஒன்றுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

## கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞான ஒடுக்கம்

வழமைப்பிரகாரம் இம்முறையும் கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞான ஒடுக்கமானது இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்மடத் தாபனத்தில் வரும் சித்திரைமாசம் 12-ந் தேதி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகிப் (16-4-50) காலை திவ்விய பூசையோடு முடிவாகும்.

உண்டி, உறையுள் சம்பந்தமான சகலவசதிகளும் வண. தாயார்அவர்களால் செவ்வனே செய்யப்படும். இவற்றை நேரகாலத்தோடு ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பதால் வரவிருப்பவர்கள் ஏற்கனவே வண. தாயார் அவர்கட்குத் தயவுடன் அறிவிப்பது நலமாயிருக்கும். ஆசிரியைகள் அல்லாத பெண்களும் பங்குபற்றுவதற்கு உத்தரவுண்டு. எனவே தங்கள் ஆன்மலாபத்தை விரும்பும் எவரும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படியாக மிக்கவிநயத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

REV. MOTHER SUPERIOR
HOLY FAMILY CONVENT,
ILAVALAI.

* * *

## பிரியதத்த வங்கி

### பிரியதத்தம்

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 26,86,039 |
| கடந்தவாரம் சொல்லியது | 30,610 |
| மொத்தம் | 27,16,649 |

### செபமாலை

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 1,98,835 |
| கடந்தவாரஞ்சொல்லியது | 638 |
| மொத்தம் | 1,99,473 |

---

❀ மஞ்சூரியாவிலே யெங்கிநகரின் தியடோர் பிறெஹர் மேற்றிராணியாருக்குச் சென்றமாசிமாதம் 26-ந்திகதி பாப்பரசர் பேட்டியருளினரென வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இவரைச் சீனக்கம்யூனிஸ்தர் இருவருடம் சிறைவைத்திருந்தனர். இவருடன் சிறையிருந்த இருகாரியதரிசிகள் 70 வயசுடைய இவரைப் பாப்பரசர் சமூகத்துக்குப் பரிவாரமாக அழைத்துச்சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினுவிடை

— V —

சுதனுனவர் எங்கள் மீட்பர்

## (5) பச்சாத்தாபம்

(முன்தொடர்ச்சி)

124. மனஸ்தாபம் ஆவது என்ன?

தான்செய்த பாவங்கள் சகலத்திற்கும், அவைகள் சருவேசுரனுக்கு நிந்தை வருவித்ததினுல், மனதிலும் எல்லாத்துக்கு மேலாகவும் நம்பிக்கையோடும் துக்கித்து, இனிமேல் அவைகளையும் அவைகளுக்குக்கிட்டின சமயங்களையும் விட்டுவிடப் பிரதிக்கினை செய்வதே மனஸ்தாபமாம்.

"சர்வேசுரனுக்குப் பொருந்திய துக்கமானது இரட்சணியத்துக்குரிய நிலைமையான தபத்தை விளைவிக்கின்றது. இவ்வுலகீக துக்கமோ மரணத்தைப் பிறப்பிக்கின்றது"—2. கொரி. VII. 10.

"நீ போ, இனிப்பாவஞ் செய்யாதே"—அரு. VIII. 11.

"உன் வலதுகண் உனக்கு இடறலாயிருந்தால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு"—மத். V. 29.

125. மனஸ்தாபத்தில் எத்தனை பாகங்கள் உண்டு?

கடந்தகாலத்தை நோக்குகிற துக்கமும், வருங்காலத்தை நோக்குகிற பிரதிக்கினையுமாகிய இரண்டு பாகங்கள் உண்டு.

126. நாம் "பாவங்கள் சகலத்திற்கும்" மனஸ்தாபப்படவேண்டுமா?

ஆம். நாம் ஒன்றையும் தவிராமல் எல்லாப்பாவங்களையும் குறித்துப்பொதுவாக மனஸ்தாபப்பட வேண்டும்.

127. உண்மையான மனஸ்தாபத்துக்கு, பாவங்களுக்குக் "கிட்டின சமயங்களையும் விட்டுவிட"ப்பிரதிக்கினை செய்யவேண்டுமா?

ஆம். நாம் நம்மைஎளிதாய்ப் பாவத்தில் விழுத்தக்கூடியபழக்கம், கிருத்தியம், ஆள், இடம், பொருள் முதலிய பாவச்சமயங்களை வெறுத்துத் தள்ளிவிட்டால்தான், நாம் உண்மையாகப் பாவங்களையும் வெறுத்துத் தள்ளிவிடுகிறோம் என்கலாம்.

128. நாம் "மனதில்" மனஸ்தாபப்பட வேண்டுமா?

ஆம். நமது மனஸ்தாபம் உணர்ச்சியில் அல்லது பேச்சிலிருந்தல்ல, உள்சித்தத்திலிருந்தே வரவேண்டும்.

129. நாம் நமது பாவங்களைப்பற்றி "எல்லாத்துக்கும் மேலாக" மனஸ்தாபப்பட வேண்டுமா?

ஆம். நமது மனஸ்தாபம் நாம் பாவத்தை எல்லாத்தின்மைகளிலும் பார்க்ககூட வெறுப்பதிலிருந்து உண்டாகவேண்டும்.

130. நாம் "நம்பிக்கையோடு" மனஸ்தாபப்படவேண்டுமா?

ஆம். உண்மையான துக்கமும் உறுதியான பிரதிக்கினையுமுள்ள மனஸ்தாபத்துக்கு நாம் நமது கெட்டித்தனத்திலேயல்ல, சருவேசுரனுடைய பிரசாத உதவியிலேயே தங்கவேண்டும்.

131. நமது பாவங்கள் "சருவேசுரனுக்கு நிந்தைவருவிப்பதினுலேயா" நாம் அவைகளைப்பற்றி மனஸ்தாபப்படவேண்டும்?

ஆம். நமது மனஸ்தாபம், பாவத்தால் நமக்கு உலககேடுகள் நேரிட்டதே என்றமுகாந்தரத்தாலல்ல, சருவேசுரனுக்குத் துரோகஞ்செய்தோமே என்ற சுபாவத்துக்குமேலான முகாந்தரத்தால் உண்டாகவேண்டும்.

132. சுபாவத்துக்குமேலானமுகாந்தரத்தையிட்டு மனஸ்தாபம் எத்தனை வகைப்படும்?

உத்தமமனஸ்தாபம், அடிமைமனஸ்தாபம் என இருவகைப்படும்.

133. உத்தமமனஸ்தாபம் ஆவது என்ன?

நமது பாவங்களினுல், அளவில்லாத சகல நன்மைநிறைந்தவரும் எல்லாத்தையும்பார்க்கச் சிநேகிக்கப்படப் பாத்திரமானவரும், நமதுபேரில் மட்டில்லாதசிநேகமுள்ளவருமாகிய சருவேசுரனுக்குத் துரோகஞ்செய்தோமேஎன்று நினைத்து தேவநேசத்தால் எழும்பும் மனஸ்தாபமாம்.

134. அடிமைமனஸ்தாபம் ஆவது என்ன?

நமது சாவானபாவங்களினுல் மோட்சபாக்கியத்தை இழந்து நாக ஆக்கினைகளுக்கு உள்ளானுேமே என்று நினைத்துத் தேவபயத்தால் எழும்பும் மனஸ்தாபமாம்.

135. பாவப்பொறுத்தலுக்கு எப்படிப்பட்ட மனஸ்தாபம் வேண்டும்?

பச்சாத்தாபத்தோடு சேர்ந்தால் அடிமைமனஸ்தாபம்போதும். ஆனுல் பச்சாத்தாபம்பெறத் தொகுப்பானவிதமாய் என்கிலும் ஆசைப்பட்டு உத்தமமனஸ்தாபம் பண்ணினுல் பச்சாத்தாபம்பெறமுதல் பாவம்பொறுக்கப்படும்.

"இவள் மிகவும் சிநேகித்ததினுல், இவளுக்கு மிகுந்தபாவங்கள் பொறுக்கப்படுகின்றன" —லூக். VII. 47.

136. உத்தரிப்பு ஆவது என்ன?

குருவானவர்தரும் அபராதத்தை நிறைவேற்றுவதினுலும், வேறு தவக்கிருத்தியங்களைச் செய்வதினுலும், திருச்சபையின் தபசிளக்காரங்களைப் பெறுவதினுலும், பிறருக்குவருவித்த நஷ்டத்தை நிவிர்த்திபண்ணுவதினுலும், நமது மன்னிக்கப்பட்ட பாவங்களின் அநித்திய ஆக்கினைக்கடனைத் தீர்ப்பதே உத்தரிப்பாம்.

"நீங்கள் தபஞ்செய்யாவிட்டால், எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"—லூக். XIII. 5.

137. குருவானவர்தரும் "அபராதத்தை நிறைவேற்றுவதினுல்" எப்போதும் நமது பாவங்களுக்கு முழு உத்தரிப்புச் செய்யலாமோ?

இல்லை. ஆகையால் முழுஉத்தரிப்புச்செய்ய நாம் வேறு நற்கிருத்தியங்களைச் செய்யவும் திருச்சபையின் தபசிளக்காரங்களை அடையவும்வேண்டும்.

138. நாம் "பிறருக்கு வருவித்த நஷ்டத்தையும்" உத்தரிக்கவேண்டுமா?

ஆம். நாம் பிறருடையஆத்துமம் சங்கை பொருள் முதலியவற்றிற்கு வருவித்த நஷ்டத்தை நிவிர்த்திசெய்தும், அநீதியாய் அபகரித்தவைகளைத் திரும்பக்கொடுத்தும், பிரசித்த துன்மாதிரிகைக்குப் பிரசித்தபரிகாரஞ்செய்தும், பகையாளிகளோடு சமாதானப்பட்டும் உத்தரிக்கவேண்டும்.

139. கள்ளப்பாவசங்கீர்த்தனம் செய்தால், அல்லது வேணுமென்று மனஸ்தாபப்படாமல்விட்டால், அல்லது உத்தரிப்புச்செய்யாமல்விடக் கருதியிருந்தால், பச்சாத்தாபம் செல்லுமோ?

இல்லை. பச்சாத்தாபம்செல்லாதது மாத்திரமல்ல, தேவதுரோகமுமாகும். இதைத்திருத்தாமல் வேறு பச்சாத்தாபங்களையும் நற்கருணைகளையும் பெற்றுக்கொண்டால் அவைகளும், தேவதுரோகமாகும்.

140. குருவானவர் பாவப்பொறுத்தலை மறுத்தால் அல்லது பின்போட்டால் நாம் என்ன செய்யவேண்டும்?

நாம் தகுதியில்லாமலிருப்பதினுல் அதை மறுத்தால், நம்மைத்தகுதியுள்ளவர்களாகிக் கொண்டுதிரும்பவும் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும். தாம் நம்முடைய சிலபாவங்களைப்பொறுக்க மேற்றிராணியாரிடம் அல்லது பாப்பானவரிடமிருந்து அதிகாரம் பெறவேண்டியிருப்பதினுல் அதைப் பின்போட்டால், அந்தஅதிகாரம் பெற்றபின் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகவேண்டும்.

141. பச்சாத்தாபத்தைப் பெற்றுக்கொள்வது கடமையா?

ஆம். வருஷத்தில் ஒருமுறை என்கிலும் அதைப்பெற்றுக்கொள்வது கனமானகடமை. ஆனுல் பத்தியுள்ள கிறீஸ்தவர்கள் திருச்சபையின் தபசிளக்காரங்களை அடைவதற்கு வசதியாக மாசத்தில் இருமுறை என்கிலும் அதைப் பெற்றுக்கொள்வார்கள்.

142. பச்சாத்தாபத்தின் பயன்கள் எவை?

(1 a) ஞானஸ்நானத்துக்குப்பின் செய்த சாவானபாவங்களை மன்னித்து நம்மில் ஞானச்சீவியத்தைப் பிறப்பிக்கிறதும் நித்தியநாகஆக்கினையை நீக்கிவிடுகிறதுமான நீதிமானுக்கும் பிரசாதமும், (1 b) நாம் பிரசாதநிலையிலிருந்தால், அற்பபாவங்களை மன்னித்து நமது ஞானச்சீவியத்தை அதிகப்படுத்துகிற பரிசுத்தமாக்கும் பிரசாதமும், (2) நமது பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினைக்கடனில் ஒருபகுதியை என்கிலும் தீர்க்கிற உத்தரிப்புப்பேறும், (3) சாவானபாவத்தால் இழந்துபோன நமது பெறுபேறுகளைத் திரும்பத் தருவதும், (4) பாவங்களைத் தைரியத்தோடு விலக்கப்பண்ணுகிற திவ்வியனுமானப் பிரசாதமுமாம்.

## துண்டு—துணுக்கு

ஐதிராபாத்தின் நிசாம்மன்னர் என்றுல் அவர் பெரிய கோமசுரர் என்று ஆருமே சொல்லிவிடுவர். சுமார் 50 கோடி பவுண் பெறுமதியான பிரத்தியேக சொத்துகளைத் தாம் கொண்டுள்ளாரென நிசாம் உலகப் பிரசித்திபெற்றவர். அவர் இந்தச் சொத்துகளில் அதிகமானவைகளைப் பவளங்கள், மரகதங்கள், மாணிக்கங்களிலே முதலிட்டுவைத்திருக்கின்றூர். ஆனுல், அவர் வாரம்ஒன்றுக்குத் தமது சொந்தத் தேவைகளுக்கென ஏறக்குறையப் 15 ரூபாவுக்குமேல் செலவிடுவதில்லையென்று சொல்லப்படுகிறது. சாதாரண கிராமவாசிகளின் உடைகளையே அவர் தரித்துக்கொள்ளுகின்றூர். கட்டுமட்டாகவே சாப்பிடுகின்றூர். ஆடம்பரமற்ற ஓர்காரிலே செல்லுகின்றூர். 64 வயசுடையவரான நிசாம மன்னரின் பிரதான பொழுதுபோக்கு, தமது மாளிகை விறுந்தையில் உட்கார்ந்து கவிகள் எழுதுவதே. தற்போது அவர் இங்கிலாந்திலே யோக்ஷயரில் போய்க் குடியேறவேண்டுமென்று சிந்திப்பதாகச் சொல்லப்படுகிறது. ஐதிராபாத் சமஸ்தானம் சமீபத்திலே இந்திய யூனியனுடன் சேர்க்கப்படலாயிற்று.

* * *

செவ்வாய்க் கிரகத்திலே சமீபத்தில் மிகப்பிரமாண்டமான வெடிச்சப்தம் ஒன்று ஏற்பட்டதாம். அது யப்பானில் அவதானிக்கப்பட்டதாக வாஷிங்டன்நகரிலிருந்து அறிவிக்கப்படலாயிற்று. இந்தச்சப்தம் அவ்வளவு தூரந்தூலயிலிருந்து கேட்டபோதே செவ்வாய்க்கிரகத்திலுள்ள வர்களும் அணுக்குண்டையோ அல்லது சல வாயுக்குண்டையோ செய்துவிட்டார்களாக்கும என்ற யோசனை எழலாயிற்று. அதனுல், சந்திர-கிரக அவதானிகள் சங்க தலைவரான திரு. வால்றர் காஸ் அவர்கள், உலகமுழுவதிலும் விஞ்ஞானிகள் இதனை ஆராய்வாகக் கவனிக்கவேண்டுமென்றும், சற்றேறக்குறைநிறமும், 60 மைல் உயரமுமான முகிலுடன் கூடிய 900 மைல் குறுக்களவுள்ள ஓர் வட்டகாமான பகுதியே அவ்வெடி உண்டான இடமென்றும் தெரிவித்திருக்கின்றூர். அது ஓர் வெடியாய் இருக்கமாட்டாது; ஆனுல் ஓர் பிரமாண்டமான துகள்முகிலாய் இருக்கக்கூடும்; ஏனெனில், செவ்வாய்க்கிரகம் அதற்குத் தாயகமான தளன்று ரேயல் அவதான நிலையத்தின் பிரதமஉதவி வானசாஸ்திரியான டக்றர் ரூபேட் அற்கின்சன் கூறுகின்றூர்.

* * *

60 வருடமாக நித்திரை செய்தறியாத இத்தாலியர் ஒருவர் சமீபத்திலே வடஇத்தாலியைச்சேர்ந்த சார்காமோ எனுமிடத்தில் தனது 80-ம் வயசில் காலஞ்செல்லலாயினர். இவர் ஒரு நாட்டு வைத்தியர். இவர்நாமம் பேர்டினண்டோ பவோனி என்பது. 20-ம் வயசிலே இவர் ஓர்போர்வீரனுகக் கிறீஸ் நாட்டுக்குச்சென்று திரும்பியதும் நித்திரைவராது பெரிதும் கஷ்டப்பட்டார். கடைசியாக நித்திரையே அவரை மறந்துவிட்டது. அவரும் நித்திரையை மறந்துவிட்டார். ஆதலால் எஞ்சிய 60 வருடங்களிலும் இராக்காலத்தில் சும்மாதங்கி ஆறியிருப்பார். என்றுலும் அவர் புத்திச்சுவாதீனத்தை இழக்கவில்லை. எத்தனையோ பெரியடக்றர்மார் இவரைச் சோதித்தும் அவரது நித்திரையின்மைக்குக் காரணம்யாதென்பதை அவர்களால்கண்டறியமுடியவில்லை. ஆனுல், ஒரு காரியம். இந்த வைத்தியரை அக்கிராமத்திலுள்ள சனங்கள் வெகுவாகநேசித்து இவரல்லோ வைத்தியர் என்று பாராட்டிவந்தார்கள். ஏனெனில், நோயாளரை வந்துபார்க்கும்படி இரவிலே எந்தவேளையில்வந்து அவர்களைகூப்பிட்டாலும் உடனேதானே சந்தோஷத்துடன் எழுந்து போய்விடுவார்.

* * *

வருடம் ஒன்றுக்கு ஐந்து ரூபாவிற்குக் குறைந்த செலவிலே குஷ்டரோகி ஒருவருக்குக் கொடுபடும் ஓர் புதிய மருந்துகொண்டு குஷ்டரோகத்தைக் கட்டுப்படுத்திவிடலாமெனச் சொல்லப்படுகிறது. நைஜீரியாவிலே சிலகாலமாக நடைபெற்றுவருகின்ற பரிசோதனையைத் தொடர்ந்து, உலகமுழுவதிலுமுள்ள குஷ்டரோகர்களுக்குப் புதிய நம்பிக்கை அருளப்படுகிறது. அங்கு குஷ்டரோக சேவையின் ஆராய்ச்சி நிலைய தலைவரான டக்றர் ஜோண் லொவே இதுவிஷயமாய்ப் பேசியபோது: 'டயமினேசல்போன்' என அழைக்கப்படும் இந்தமருந்து குஷ்டரோகத்தைப்போக்குவதில மிகப்பலிதமுடையதாய்க் காணப்படுகிறது; வாரம் இருமுறையாக வருடம்ஒன்றுக்கு இம்மருந்துகொண்டு சிகிச்சைசெய்ய ஏற்படும்செலவு ஏழு சிலின் அதாவது ஐந்துரூபாதானும் இல்லை; அதனுல் இம்மருந்து வருங்காலத்திலே குஷ்டரோகர் ஒருவரின் சிகிச்சைக்கென ஏற்படும்செலவை நூற்றுக்குத் 90 வீதம் குறைத்துவிடுவதாகும்; அதனுல் அத்துணை குறைந்த செலவும், மிகுந்த பலிதமுமான இம்மருந்துகொண்டு உலகின் பெரிய தொற்றுநோய்களில் ஒன்றான குஷ்டரோகத்தையே முதன்முதலாகக் கட்டுப்படுத்திவிடமுடியுமென்றகருத்து பிறந்திருக்கிறது எனத் தெரிவித்திருக்கின்றூர்.

* * *

குறுகிய ஒளிஅலைகளைச் செலுத்திக் கிருமிகளைக் கொல்லத்தக்கதும், தொழிற்சாலைகள், சாய்ப்புகள், வீடுகளிலுள்ள தொற்றுகளை அகற்றவல்லதுமான நவீன க்ருவி ஒன்று அநேக மாதங்களாக நடத்திய ஆராய்ச்சியின் விளைவாய் லண்டன்நகரிலே கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனைத் தொழிற்சாலைகளில் பிரயோசக்குமிடத்து, தொழிலாளர்கள் சல தோஷம் வாராது பாதுகாக்கப்படுவார்கள். சாதாரண வீட்டு ஈக்கள்தானும் இந்த ஒளி அலைகளால் பாதிக்கப்பட்டுப் பலமற்று விழுந்து அழிந்துவிடும். ஆஸ்பத்திரி வாட்டுகளிலே தொற்றுநோய்க்கிருமிகள், விஷங்களைத் தொடர்பாக அகற்றிக்கொண்டிருப்பதற்கும் இது உபயோகமாகக்கூடியது. இந்த நவீனகருவி ஏலவே விற்பனைக்கு வந்து ஒன்று 200 ரூபாவாக விலைப்படுகின்றது. ஆகாயத்தைக் கிருமிகளில்லாமலும், தொற்றுதலில்லாமலும் செய்துவிடுவதே இதன் முக்கிய குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## மருதமடுவில் தெலிபோன்

தபால்-தந்தி மந்திரியாரான திரு. சி. சிற்றம்பலம் அவர்கள் சென்ற 11-ந் திகதி சனிக்கிழமை மருதமடுத்திருப்பதியில் தெலிபோன்சேவையை ஆரம்பித்துவைத்து அதன்மூலம் அங்கிருந்து பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களுக்கு முதன்முதலாகச் சோபன வாழ்த்துகள் அனுப்பிவைத்தனர். அவரைத்தொடர்ந்து நம்மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் கொழும்பு அதிமேற்றிராணியாருக்கும்,, போஸ்ற் மாஸ்றர்ஜெனறல் மேஜர் அலோசியஸ் பெரேரா அவர்களுக்கும் சோபன செய்திகள் அனுப்பிவைத்தனர். மடுத்திருப்பதிப் பரிபாலனசுவாமியவர்கள் "சன்டே இஸ்லஸ் றேற்ரெட்" பத்திரிகைக்கு தெலிபோன்வாழ்த்துகள் அனுப்பிவைத்தார். தபால்-தந்திமந்திரியார் அனுப்பிய சோபனவாழ்த்துகளுக்காகப் பிரதமர் அவருக்கு நன்றிகூறி மடுப்பதிக்கோவிலிலே ஞானமக்தோலிக்க திருயாத்திரிகருக்குத் தெலிபோன்வசதிகள் அருளப்பட்டிருப்பதையிட்டுத் தாம் சந்தோஷமடைவதாகத் தெரிவித்தார். மடுப்பதியிலுள்ளயாத்திரிகர் எவரும் மட்டான சலாரிலேஇலங்கையின் எந்தஒருபகுதியிலுமுள்ள எவரோடாவது இனிமேல் தெலிபோன்மூலம் பேசமுடியுமென்றும், இந்தச்சேவை நிரந்தரமானதென்றும், தற்போது அங்கேகோவிலிலிருந்து ஏறக்குறைய இருபதுயார் தூரத்திலே யாத்திரிகர் ஒவ்வொருவருக்குமே கிடைக்கக்கூடியதாய் அழைப்புப் பெட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், அதிகம்விரைவிலே மடுப்பரிபாலன சுவாமியவர்களுக்கு மற்றோர் தெலிபோன் கொடுக்க நம்பியிருக்கிறாரென்றும் போஸ்ற்மாஸ்றர்ஜெனறல் தெரிவித்திருக்கின்றார். தெலிபோன்சேவை ஆரம்பவைபவத்தின்போது யாழ்ப்பாணத்திலிருந்தும், பிறவிடங்களிலுமிருந்தும் போயிருந்த குருமாருடன் சலாபத்திலிருந்துபோன பெருந்தொகையான யாத்திரிகரும் சமுகமாயிருந்தார்கள்.

## தலைவில்லுத் திருநாள்

தலைவில்லுச் சந்தாளுள்திருப்பதியிலே தபசுகாலத்திருநாள் சிலாப மேற்றிராணியாரால் நிறைவேறிய பெரிய பாடற்பூசையுடன் முடிவாகியது. அங்கே இம்மாசத்தில் இரண்டாம்முறையாக றெயில்வேப்பகுதியானது யாத்திரிகரின்வசதியைமுன்னிட்டு றெயில்-றோட்சேவையை ஒன்றுபட நடத்தலாயிற்று. திருப்பதியிலிருந்து திரும்புகிற யாத்திரிகர் அந்த ஸ்தாபிக்கப்பட்டிருந்த விசேஷ றெயில்-றோட் ஸ்ரேஷனிலே இருபிரயாணங்களுக்குமாகத் திக்கெற்றுகள் வாங்கக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது. அந்தத் திக்கெற்றுகள்கொண்டு பாலைக்குடாவிலிருந்து சிலாபம்வரையிலே 55மைல் தூரம் றோட்டிலே அவர்கள் பிரயாணஞ்செய்து, பின்னர் சிலாபத்திலிருந்து விசேஷறெயின்வண்டியில் ஏறிச்செல்ல ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. பாலைக்குடாவிற்கும், தலைவில்லுக்கும் இடையிலுள்ள இரண்டுமைல் தூரமான மணல்பாதைப் பயணத்தை விசேஷ பொலிஸ், றெயில்வே ஜீப்கள், றக்குகளிலே யாத்திரிகர் நடத்தினார்கள்.

## சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைநடத்திவந்த சங். டயஸ் பண்டாரநாயக நீதியாசர் பதினேழுவழக்குகளை விசாரணைசெய்துவிட்டுச் சென்ற 9-ந்திகதி வியாழக்கிழமை கொழும்புக்குச்சென்றனர். கடைசியாகப் பருத்தித்துறையைச்சேர்ந்த கம்பாமூலையிலே எம். தம்பிராசாஎன்பவர் அவ்வூர் சங்கரன் வைரமுத்து என்பவரைக் கொலைசெய்தாரெனத் தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்குவந்து, தான் கைபிழைபாட்டுக் கொலைக்குற்றவாளிஎன்று எதிரி ஒப்புக்கொண்டதன்பேரில் பத்துவருடக் கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன். விசாரணைமுடிவில் நீதியாசர் யாழ்ப்பாண வழக்கறிஞர்களைப்பாராட்டிப்பேசியவிடத்து: இதுவரை நாம் இலங்கைமுழுவதிலும் பல்வேறுகோடுகளிலும் விசாரணைநடத்திவந்திருக்கிறேன்; ஆனால் சற்றேகஷ்டமான நமது கடமைகளை நிறைவேற்றுவதிலே யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் நமக்குத் துணைச்செய்வதில் காட்டியதிறமையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சிஎய்துகின்றேன்; நேரத்தை அவம்போக்காமல் வழக்குகள் மகாதிறமையுடன் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன எனக் கூறலாயினர்.

## யாழ்ப்பாணத்தின் ஆயத்தம்

யாழ்ப்பாணமேயர் திரு. சி. பொன்னம்பலம் அவர்களும், வடமாகாண ஏசன்றர் திரு. பி. ஜே. ஹட்சன் அவர்களும் விடுத்தஓர் அழைப்பின்பேரிலே பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும்போது, அவருக்குச்சிறந்த வரவேற்பு உபசாரம் அளிப்பதற்காக என்னநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்பதுபற்றி ஆலோசிப்பதற்காகச் சென்ற 5-ந்திகதிகாலை நகரமண்டபத்திலே பெருந்தொகையான பிரதிநிதிகள் சமுகங்கொடுத்திருந்தார்கள். பிரமுகர்கள் பலரும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்ததன்மேல் வரவேற்புக் கம்மிற்றியின் தலைவராகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் ஏகமனதாகத் தெரியப்பெற்றனர். பின்னர் இணைக்காரியதரிசிகள், இணைப்பொக்ஷகர்கள் தெரிவுசெய்யப்பெற்றனர். பிரதமர் அடுத்தசித்திரைமாசத்தின் இரண்டாவதுவாரத்திலே உத்தியோகமுறையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். பிரதமராகத் தெரியப்பெற்றபின் யாழ்ப்பாணத்துக்கு அவரின் முதற்தரிசனை இதுவேயாகும்.

## அடுத்தமுறை தமிழில்

சுகாதார-ஸ்தலதாபன மந்திரியார் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அவர்கள் தற்போது தமிழ்பேசக் கற்றுவருகின்றார். அவர் வடமராட்சியில் தமக்குஅருளப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசியபோது: அடுத்தமுறை யாழ்ப்பாணம்வரும்போது தமிழிலே சனங்களுக்குப் பேச்சுகள் நிகழ்த்துவதாக வாக்களித்திருக்கின்றார். "நீங்கள் சிங்களம்படிக்கவேண்டும்; நாங்கள் தமிழ்படிக்கவேண்டும், அவ்வாறுபடித்துக்கொண்டால் நமக்குள்ள சொற்ப வேற்றுமைகளும் மறைந்துபோகும்" என்றும் அவர்கூறலாயினர்.

## சோளமும் கோதுமைமாவும்

இம்முறை ஊவா, கீழ், வடமத்திய மாகாணங்களிலே சோளப்பயிர் நன்றாய்விளைந்து தற்போது அப்பகுதிகளில் இருந்து றெயில்வேமூலமாகத் தினமும் மூன்றுபெட்டி அதாவது இருபது தொன் சோளம்வீதம் கொழும்புக்கு அனுப்பப்பட்டுவருகிறது. இம்முறை விளைந்தசோளம் மூவாயிரம்தொன்னுக்குச் சற்றேகூடியதொகையாய்இருக்குமென உணவுத்தலைவர் மதிப்பிடுகின்றார். அதாவது சென்றவ்ருடத்திலும் ஆயிரம்தொன்மா வரையில் கூடியதாகும். இந்தச்சோளம் முழுவதும் கொழும்பிலே மில்லில் மாவாக அரைக்கப்பட்டு இறக்குமதியாகும் கோதுமைமாவுடன்சேர்த்து விற்பனவுசெய்யப்படவிருக்கிறது. இந்தச்சோளமா இறக்குமதியாகும் கோதுமைமாவை நூற்றுக்கு 3 வீதம் குறைத்து அரசினரின் உணவுச்செலவைஎவ்வளவோ குறைத்துவிட்டிருக்கிறது.

## இடைத்தேர்தல்கள்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே கொழும்புநகர் மத்தியதொகுதியின் இரண்டாவது பிரதிநிதியாயிருந்துவந்த ஐனாப் ரி. பி. ஜயா அவர்கள் தம் பதவியை இராசிநாமாச்செய்துவிட்டமையாலும், பலப்பிட்டிப் பிரதிநிதியாய்இருந்துவந்த திரு. ஆர்தர் டி சொய்சா அவர்கள் காலஞ்சென்றமையாலும் [illegible] கள் காலியாய்இருக்கின்றன. இவற்றிலே கொழும்புநகர் மத்தியதொகுதிக்குஅபேட்சகராக முன்நிற்போர்வருகிறசித்திரைமாதம் 1-ந்திகதியும், பலப்பிட்டித்தொகுதிக்கு அபேட்சகராக முன்நிற்போர் அம்மாசம் 5-ந்திகதியும் நியமனபத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## இரு எதிரிகளின் அப்பீல்

கொழும்புக் குதிரைப்பந்தையகிளப் கொள்ளை-கொலைவழக்கிலே மரணதண்டனைவிதிக்கப்பட்டுள்ள ஐந்தாம்எதிரியான விஜெதாச பெரேராவும், ஏழாம் எதிரியான ஜேம்ஸ் செனெவிரத்னவும் அப்பீல்மனுக்கள் சமர்ப்பித்திருக்கின்றனர். தங்கள் அப்பீல் ஏன் ஆலோசிக்கப்பட வேண்டுமென்பதற்கு முந்தியஎதிரி 11 குறிப்புகளும். பிந்தியஎதிரி 8 குறிப்புகளும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இவர்களின் அப்பீல்கள் வருகிறவைகாசிமாசம் 29-ந்திகதி விசாரணைசெய்யப்படவிருக்கின்றன. கொள்ளைக்கு உபயோகிக்கப்பட்டகாரை விடுதலைசெய்யும்படி 2-ம் எதிரியான எம். கே. வில்சனின் நியாயவாதி ஓர்மனு செய்திருக்கின்றார். மரணதண்டனைவிதிக்கப்பட்ட முனசிங்க, இராசபக்ஸ எனும் மற்றஎதிரிகளும் பிந்தஅப்பீல்மனுக்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

## வரவிலும்கூடிய செலவு

நமதுஅரசினருக்குச் சென்றமாதம் கிடைத்தவருமானத்தைக் காட்டிலும் செலவு 35 லட்சத்து 74 ரூபாவால் அதிகரித்திருக்கிறது. இவ்வாறு அம்மாசத்தில் செலவுகூடியபோதிலும் சென்றஐப்பசிமுதல் மாசிஈறாகவுள்ள ஐந்துமாசங்களிலும் அரசினருக்குக் கிடைத்துள்ள வருமானத்திலே செலவுக்குக்கண்டு 3 கோடியே 7 லட்சத்து 42 ஆயிரம்ரூபா எஞ்சியிருக்கிறது. சென்றமாசியில் அரசினருக்குக் கிடைத்தவருமானம் 3 கோடியே 67 லட்சம்ரூபா. சென்றசெலவு 4 கோடி 2 லட்சத்து 50 ரூபாவாகும்.

## அதிக சாராயப்பாவனை

தவறணைகளை மூடிவிடுமாறு மதுவிலக்குஅபிமானிகள் பெருமுயற்சி எடுத்துவந்தபோதிலும் இலங்கையிலே சாராயப்பாவனை இன்று அதிகரித்துக்கொண்டேவருகிறது. அதனால் இவ்வருடத்துக்குப்போதுமென்று அரசினர் நம்பியிருக்கும் ஆறுலட்சம்கலன் சாராயம் போதாமற்போகும்போல் இருக்கிறது. ஆகவே இந்தமேலதிகமானதேவையைப் பூர்த்திசெய்யும்படியாகக் குறித்ததொகையிலும்கூடுதலாக ஒருலட்சம்கலன் சாராயம்உதவும்படி சீதுவாவிலுள்ள அரசாங்கசாராயவடிச்சாலை கேட்கப்படலாமெனத் தெரியவருகிறது.

## அரசாங்கமும் அரிசியும்

தற்போதுபோல நமது அரசினர் 1953-ம் ஆண்டுவரையில் தாமே அரிசி இறக்குமதிசெய்வதெனத் திட்டமாக முடிவுசெய்திருக்கின்றனர். அதற்குப் பின் எவர் அரிசிஇறக்குமதி செய்வது என்பதுபற்றித் தீர்மானமஎதுவும் செய்யப்படவில்லை. ஆனால், கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்துக்கே இந்தப்பொறுப்பு ஒப்படைக்கப்படும் போல் இருக்கிறது.

## ஆவணிமாதம் யானைக்காலை

இரத்தினபுரிப்பிரிவைச்சேர்ந்த பனமுற எனுமிடத்திலே வருகிறஆவணி மாசம் யானைக்காலைஒன்றை நடத்துதற்கான ஆயத்தங்களைப் பிரதிநிதிகள் சபையின் ஸ்பீக்கரான சேர் பிரான்சீஸ் மொலமூரே அவர்கள்செய்துவருகின்றார். அதற்கானதிட்டங்களை அவர் ஏலவே வகுத்துச் சென்றசனிக்கிழமை அவ்விடத்தைப்பார்வையிட்டுக் காலை அடைக்கவேண்டிய பகுதியைப் பரிசோதித்திருக்கின்றார். சிங்களமன்னர்கள் நடத்திவந்த இந்த மிருகவேட்டையானது கீர்த்திபெற்ற சிங்களப்பிரதானியும், சேர் மொலமூரே அவர்களின் பெரியதந்தையாருமான மடுவன் வலகிசாவயால் திருப்பவும் ஆரம்பிக்கப்பட்டபின் நடைபெறவிருக்கும் 25-வது யானைக்காலை இதுவாகும். அவரே 21 காலைகளை நடத்தியிருக்கின்றார். காலை 12 அடிஉயரமும் இரண்டரைஏக்கர் விஸ்தீரணமும் உடையதாயிருக்கும். கவர்னர்-ஜெனறல், பிரதமர், மந்திரிமார், பிறநாடுகளைச்சேர்ந்த தரிசகர்கள் இதற்குச் சமுகமளிக்கவிருக்கின்றார்கள். காலைநடத்தி யானைகளைப் பிடிக்குங்காட்சி சினிமாப்படம் பிடிக்கப்படவுமிருக்கிறது.

## வைத்திய மாணவர்கள்

இலங்கைச்சர்வகலாசாலையின் கீழ்ப் பட்டதாரிகளான மாணவர்கள்மத்தியிலே சமீபகாலமுதல் ஓர்பெரியமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஆட்ஸ், சயன்ஸ் கற்பதைக்கைவிட்டு அவர்களில்அநேகர் வைத்தியகல்லூரியை நாடத்தொடங்கியிருப்பதேயாகும். இதற்குக்காரணம், சர்வகலாசாலையிலிருந்து வைத்தியபட்டதாரிகளாய் வெளிகொள்ளும் டக்றர்மார் அரசாங்க வைத்தியசேவையில் உடனேதானே உத்தியோகம்பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருப்பதும், ஆரம்பவேதனமாக மாதம் 400ரூபா கொடுபடுவதுமேயாகும். இந்தநிலைமை இன்னும்சிலவருடங்களுக்கு நீடித்திருக்குமெனச் சர்வகலாசாலை உபஅத்தியட்சகர் கூறுகின்றார். பி. ஏ., பி. எஸ்,சி. பட்டதாரிகளுக்கு ஆசிரியசேவையில் அவ்வளவு சுகமில்லையாம்.

## சென்னை விமானசேவை

இதுவரை கொழும்பிலிருந்து 'ஏயர் சிலோன்' விமானங்கள் சென்னைக்குக் காலையிலேயே புறப்பட்டுவந்தன. ஆனால், சென்ற 13-ந் திகதிமுதல் அவைகள் சாயந்தரவேளை சென்னைக்குப் புறப்பட்டுச்சென்று மறுநாட் காலை அங்கிருந்தும் திரும்பிவருகின்றன. இதனால் வர்த்தகர் அந்தந்த இடங்களிலே தங்கியிருக்கும் நேரத்தைக் குறைக்கவும், இந்தியஆகாயத் தபால்கள், கடிதங்களை இலங்கையில் தீவிரமாய்க்கொடுக்கவும் முடியுமெனத் தெரியவருகிறது.

## மதுவிலக்கும் கார்களும்

மதுபானத்தவறணைகளைப் பொதுச்சன சம்மதவாக்குக்கேட்டு நீக்கும்விஷயமாய்ச் சீட்டுப்போடும் இடங்களுக்கு வாக்காளரை ஏற்றிச்செல்ல உபயோகிக்குமாறு அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் தங்கள்கார்களை விட்டுகொடுக்கலாமோஎன்று அகிலஇலங்கைப் புத்தகாங்கிரஸ் அரசினரைக் கேட்கலாயிற்று. அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் அதற்கெனத் தங்கள்கார்களை உபயோகிக்க அனுமதிக்கப்பட்டிலரெனத் தற்போது அரசினர் தெரிவித்திருக்கின்றனர்.

## 50,000 ரூபா வெகுமானம்

கொழும்புக் குதிரைப்பந்தையக்கிளப் கொள்ளை-கொலை சம்பந்தமாய்ப் பொலிசருக்குப் பயன்தரக்கூடிய தகவல் அனுப்பிவைத்தவர்களுக்கு வெகுமதிகளாக 50,000 ரூபா உபகரிக்கப்படவிருக்கிறது. ஆனால், இந்தவெகுமதிகள் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள எதிரிகள் சமர்ப்பித்திருக்கும் அப்பீல்மனுக்கள் விசாரணைசெய்து ஒருமுடிவுக்கு வந்தபின்னரே வழங்கப்படுமெனப் பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல் தெரிவித்திருக்கின்றார்.

## மஸ்கேலியாப் புதியபிரதிநிதி

சமீபத்திலே திரு. ஜி. ஆர். மோர்த்தா அவர்களின் மரணத்தாலே பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையில் காலியான மஸ்கேலியாஸ்தானத்துக்குப் புதியபிரதிநிதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் சென்றசனிக்கிழமை நடந்தேறியது. அதிலே அபேட்சகர்களாக முன்னின்றவருள் இலங்கை இந்திய காங்கிரசைச்சேர்ந்தவரான திரு. ஏ. அசீஸ் அவர்களுக்கு 11,343 சீட்டுகளும், திரு. ஜி. ஆர். இராஜப்பிரியர் எனும்இந்தியருக்கு 1,301 சீட்டுகளும் கிடைத்தமையால், திரு. அசீஸ் மற்றவரிலும் 10,042 அதிகப்படியான சீட்டுகளைப்பெற்று மஸ்கேலியாவின் புதிய பிரதிநிதியாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான படையெழுச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம்பிரதிகள் வெளியாகிவந்தன. ஆனால், யுத்தகாலத்திலும், அதன்பின்னரும் இத்தொகை குறைந்து தற்போது 60,000 பிரதிகளே வெளிவருகின்றன. இதற்குக்காரணம் உலகமுழுவதையுஞ்சுற்றி ஓர் தினவர்த்தமானியை அனுப்பிவைப்பதில்ஏற்படும் ஆகாயத்தபால்சலார் அதிகம் ஏற்றமாய் இருப்பதேயாகும். இதன் அதிகம்ஒழுங்கான சந்தாதார்களில் ருஷியசர்வாதிகாரியான மாஷல் ஸ்ராலினும் ஒருவராவர். இதன் பிரதிஒன்று வத்திக்கானிலிருந்து தினமும்ஒழுங்காக ஸ்ராலினின் நூல்நிலையத்திற்கெனக் கிறெம்லினுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மற்றோர் சந்தாதார், ஓர்பொலினீசிய விருத்தாப்பிய குருவானவர். இவருக்கு ஆறுமாதத்துக்கு ஒருதரம் அரைவருடப் பத்திரிகைகள் ஒன்றுசேர்த்துக்கட்டி அனுப்பப்படுகின்றன.

## சுற்றுப்பிரயாணம்

புத்தளம் ஸ்ரீமான் கத்தோலிக்க தமிழ்-சிங்களப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களில் ஒருதொகையினருமாகிய நாம் இலங்கையின் தலைநகரான கொழும்பைப் பார்வையிடுமாறு 18-2-50 காலை பாடசாலையிலிருந்து பஸ்வண்டிகளில் பிரயாணஞ்செய்தோம். போகும்போது சந்தோஷமிகுதியினால் நவாசக்கீதங்கள் பாடிச்சென்று எல்லோரும் காலை 6 மணிக்குத் தெய்யாக்காத்தைக் கோவிலையடைந்து அங்கு நிறைவேறிய காலைப்பூசை கண்டு தேவதிருவிருந்தருந்தினோம். பின்னர் பக்கத்திலிருந்த கன்னியர்மடத்தைச்சேர்ந்த பாடசாலையில் காலைப்போசனம் முடித்துக்கொண்டு புறப்பட்டு 9 மணியளவில் கொழும்பு நகரை அடைந்து கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் ஆலயஞ்சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் கோடியற்புதரை வணங்கிப் பத்திபண்ணிக்கொண்டு புறப்பட்டு உலகில் மூன்றாவதாக விசேடம்பெற்று விளங்கும் கொழும்புத் துறைமுகம்போய்ச் சேர்ந்து அங்கே பலநாடுகளின் கப்பல்களையும், துறைமுக மாதிரி உருவத்தையும், காரியாலயங்களையும்பார்வையிட்டபின் பாராளுமன்றகட்டிடத்தையும், அதன் பலபாகங்களையும், சபாமண்டபத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தோம். அப்பால் கம்பெனித்தெருவிலுள்ள பனிக்கட்டி உற்பத்திச்சாலையைப் பார்த்துக்கொண்டு தெஹிவலையைநோக்கிப்பிரயாணமானோம். அங்கு இலங்கையிலும், உலகின் பலபாகங்களிலுமிருந்து தருவிக்கப்பட்டுக் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள பலவித மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன ஆதியவற்றைக் கண்டு களிப்படைந்து போசனநேரமாகவே, இரத்மலானை திருக்குடும்ப கன்னியர்மடத்தைச் சேர்ந்து பகற்போசனம் புசித்துச் சற்றுவேளை இளைப்பாறியபின் பிரசித்திவாய்ந்த இரத்மலானை விமான நிலையத்தையும், அங்கிருந்த பலரக விமானங்களையும் பார்த்துநிற்கும்போது, அவ்வமயம் ஆகாயவிமானத்தில் வந்துசேர்ந்த சென்னை அரசாங்க கல்விமந்திரி திரு. மாதவமேனன் அவர்களையும், அவர் கோஷ்டியையும் கண்ணுற்றுக்கொண்டு கொழும்பு நூதனசாலைசென்று அதிலே பண்டையச் சிங்கள அரசர்கால ஆடையாபரணங்கள், ஆயுதங்கள், அவர்கள்பாவித்த பொருள்பண்டங்கள், மற்றும் சிற்பசித்திரங்கள்முதலியவற்றுடன் இலங்கைக் கடைசிச் சிங்களமன்னனாகிய ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் பொற்சிம்மாசனம், கிரீடம், செங்கோல் ஆதியவற்றையும் பார்த்துப் பரவசம் அடைந்துகொண்டு எம்பாடசாலையை நோக்கிப் பிரயாணமானோம். போகும்வழியில் ருகமத்து அர்ச். லூர்துநாயகியின் ஆலயஞ்சென்று மாதாவைப்பத்திபண்ணியபின் நீர்கொழும்பு, சலாபமார்க்கமாக மாலை 11 மணியளவில் எம்பாடசாலையை அடைந்ததும் குதூகலமான சுற்றுப்பிரயாணம் முற்றுப்பெற்றது.

ஜே. எஸ். சி. மாணவன்

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

யாழ்ப்பாணம்:— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடம், நான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானதால் நன்றியாக அவர் ஏழைகளின் தருமஅப்பத்துக்கு ரூபா 5 அனுப்புகிறேன்.

அந்தோனிப்பிள்ளை திரேசம்மா

வவுனியா:— நொச்சிக்குளம் கப்பலேந்திமாதாவின் மன்றாட்டாலும் கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலாலும் எனது கடுமையான வருத்தம், மூன்றுநாளையில் சுகமானது. நன்றியாக அர்ச். அந்தோனியாரின் ஏழைகளுக்கு ரூபா 1 அனுப்புகிறேன்.

ச. மூ. வே.

சிங்கப்பூர்:— திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியார், அர்ச். பிலோமினம்மாள் இவர்களின் வேண்டுதலாலும் என்மன்றாட்டங்கள் பல அனுகூலமாயின. இன்னும் அவர்களின் வேண்டுதலினால் நான் கேட்டிருப்பனவும் அனுகூலமாகும்படி வேண்டிநிற்கும்.

ஐ. எஸ். நாதர்

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

மருதங்குளம்: ஆர். எஸ். ஆர். காசிஐயா 7-00—மாம்புரி: வ. மரியாம்பிள்ளை 2-00—திரிகோணமலை: ரி. மோசேஸ் 1-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 55-00—புத்தளம்: பி. எம். சந்திரசேகரா 1-00—புசலாவை: எவ். பி. சாமுவேல் 3-50—மஸ்கேலியா: எம். வஸ்தியாம்பிள்ளை 3-50—நீர்கொழும்பு: டபிள்யு. சிறில் பறுணாந்து 2-00—பண்டாரவளை: சூசைமரிபீற்றர் 3-00—நிவடா: வை. ஐ. சோமிஸ் 3-00—மஸ்கேலியா: எம். வஸ்தியாம்பிள்ளை 4-00—தலவாக்கொலை: ஏ. பி. சிங்கராயர் 20-00—மட்டக்களப்பு: எம்.எஸ். சாமுவேல் 2-00—தலவாக்கொலை: இமல்வி சாமுவேல் 3-00—யாழ்ப்பாணம்: இ. ரேசம்மா 2-00—நெடுந்தீவு: சீமான்யோசேப்பு 18-00—உடப்புசலாவை: டபிள்யு. ஜே. டி குரூஸ் 3-00—உப்கொற்: சி. கிறிஸ்ரி 1-50—கொக்கிளாய்: அ. அன்னம்மா 2-00—சூராவத்தை: எம். இறப்பியேல் கத்திரீனம்மாள் 1-00—சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 2-00—யாழ்ப்பாணம்: அ. ம. இராசையா -50—வவுனியா: எஸ். எம். வேந்தர்கோன் 1-00—றம்பொடா: டி. எம். பிரான்சிஸ் 2-00—மலாயா: எஸ். யோசெவ் 9-90—வதுளை: எம். ஜே. எல். ஞானப்பிரகாசம் 2-50—சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00—மாருவில்: பிறூங் அன்ரன் 25-00—உடப்புசலாவை: எஸ். வி. மரியரூஸ் பீற்றர் 7-00—வவுனியா: பி. சந்தியாப்பிள்ளை 5-00—கல்கமுவா: எஸ். மரியாம்பிள்ளை 2-00—கல்விஸ்லா: ஏ. எல். சீமோன் 4-00—வதுளை: எஸ். பேர்ணுட்பீற்றர் 2-00—தலவாக்கொலை: ஞானப்பிரகாசம் டானியேல் 5-00—அம்பிற்றியா: எம். டானியேல் 2-00—கொற்றகலை: மேரிரட்ணம் 2-00—மாத்தளை: எஸ். எவ். சீமோன் 2-00—கல்கமுவா: வ. சூசைப்பிள்ளை 2-00—முந்தல்: மா. அந்தோனிப்பிள்ளை 2-00—பம்பலப்பிட்டியா: அந்தோனியம்மாள் 2-00—முள்ளிக்குளம்: வ. அருளம்மா லேனு 2-00—மஸ்கேலியா: எம். நிக்கிலசப்பிள்ளை 4-00—வண்டுலும்ப: ஏ. எஸ். பிள்ளை 22-00—சாவகச்சேரி: எல். சி. பொன்னுக்கோன் 1-00—நெடுந்தீவு: தோமாஸ் மரியான் 1-00—நாத்தாண்டி: வி. டி பி. பெறேரு 5-00—மஸ்கேலியா: பி. வி. சில்வேஸ்றர் 5-00—இரத்தினபுரி: எஸ். ஆர். இராசசிங்கம் 5-00—வேப்பங்குளம்: க. சின்னப்பு 4-00—கொச்சிக்கடை: ச. அந்தோனிமுத்துநாடார் 5-00—வேர்வலை: எஸ். எஸ். கொடிதோர் 5-00—நுனுஓயா: எஸ். வி. பீற்றர் 2-00—பண்டாரவளை: ஜே. எஸ். பீற்றர் 2-00—யாழ்ப்பாணம்: அக்கினேஸ். 1-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00—எழாலை: க. அ. தி. 1-00—சிங்கப்பூர்: ஐ. சாமிநாதர் 5-28—இல்இல்லா: ஏ. எல். சீமோன் 2-00, சுப்பன் 1-00—வட்டகொடை: கே. ரி. எஸ். பஸ்ரியன் 1-00

| | |
|---|---|
| The Director, St. Joseph's Conference. Bishop's House. JAFFNA. | சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |

## தேவை

### மீன்பிடி பலகைவள்ளம்

சுமார் 36 அடி நீளமும், 4 அடி 4 அங்குல அகலமும், 2 அடி 6 அங்குல உயரமும் உள்ள ஒரு மீன்பிடி பலகைவள்ளம் விலைக்குத்தேவையாயிருக்கிறது. பாவித்த வள்ளமாயிருந்தாலும் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.

விற்கவிரும்புவோர் என்னவிலை, என்ன மரத்தாற் செய்யப்பட்டது, பாவிக்கப்பட்டகாலம், அதைப்பார்வையிடக்கூடிய இடம் முதலிய சகலவிபரங்களுடன் 1950-ம்ஆண்டு மார்ச்மாதம் 30-ந்திகதிக்குள் மீன்துறை இலாகாத்தலைவர், தபால்பெட்டி 531, கொழும்பு என்ற விலாசத்துக்கு அறிவிக்கவேண்டும்.

இ. ஆர். ஏ. டி சில்வா
தற்காலீக தலைவர்,
மீன்துறை இலாகா

மீன்துறை இலாகா,
கொழும்பு, 1-3-1950.

## மரணசங்கதி

மாதகலிலே உயர்வேளாண மரபினராய், பலராலும் நன்கறியப்பெற்ற ஓர் பெரியாராய் விளங்கியிருந்த திரு. சூ. அந்தோனிப்பிள்ளை சட்டம்பியார் அவர்கள் 17-2-50 வெள்ளிக்கிழமை மரணநித்திரையுள் மறைபலானரெனும் செய்தி பலர்க்குமே மிகுந்த துயரை விளைக்கலாயிற்று. இவர் மரிக்கும்போது இவருக்கு வயது 80. பலசுசீலங்களும் பொருந்திய ஓர் உத்தமர். எவரையும் தம்மாட்டுக் கவர்ந்துகொள்ளும் பெற்றிவாய்ந்தவர். தினமும் திவ்வியபூசைகண்டும், தெய்வீகவிருந்தருந்தியும், செபமாலை செபித்தும் எவர்க்கும் நன்முன்மாதிரியாய் இருந்துவந்தவர். தருமவிஷயங்களிலும், மற்றும் சற்கருமங்களிலும் ஈடுபட்டுவந்தவர். தமது பதியின் பாதுகாவலரான அர்ச். அந்தோனியார் திருநாளை முன்னின்றுநடத்தும் வழக்கமுடையவர். தருமம் தலைகாக்குமென்றே இவர்வாயில் என்றும் உதிக்கும் சொல்லாயிருந்தது. இவரின் மரணசெய்தியை அறியவந்ததும் இலங்கையின் பலவிடங்களிலிருந்தும், மலாய் நாட்டிலிருந்தும் பல அனுதாபதந்திகள் வரலாயின. மறுநாள் காலை இவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக அர்ச். அந்தோனியார்கோவிலில் ஓர் துக்கப்பாடற்பூசை கட்டளைக்குருவரால் நிறைவேறியது. சாயந்தரம் பெருந்தொகையானோர் கூடியசமூகத்திலே அழகிய பேழையில்வைத்த பிரேதமானது வேதாசார தேசாசாரமுறைகளுடன் குதிரைவண்டியிலே கோவில்கொண்டுசென்று கட்டளைக்குருவர் துக்கசங்கீதம்பாடி அந்திமசடங்குகள் நிறைவேற்றியதும் சேமக்காலை கொண்டுசென்று குருவர்ஆசீர்வாதத்தோடும், இவரது நன்முன்மாதிரிகையான சீவியத்தை எவரும் பின்பற்றி நடக்கவேண்டுமென்னும் புத்திமதியோடும் பூமதானம் செய்யப்படலாயிற்று. மலாய்நாட்டிலே சேர்வேயர் கந்தோரில் உத்தியோகமாயிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. ஏ. யோசெவ் இராசேந்திரம், மலாக்காவிலே பி. டபிள்யு. டி. இல் உத்தியோகம்பார்க்கும் திரு. ஜேம்ஸ் அந்தோனிப்பிள்ளை என்பவர்கள் இவரது புத்திரராவர். அங்கு போஸ்ற்மாஸ்றராயிருந்து இளைப்பாறி இங்குவந்திருப்பவரான திரு. ஏ. தோமஸ்அவர்கள் இவரது புத்திரியை மணஞ்செய்தவர். இவரை இழந்து துயருறும் சகலரோடும் நானும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P.

—நிருபர்

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருவிருதய இரக்கத்தினாலும் பொம்பேய்மாதாவின் வேண்டுதலினாலும் கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரின் சலுகையினாலும் நான் கேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன் அவர்களுடைய நாமங்கள் என்றும் எல்லோராலும் புகழப்படுவதாக.

சூராவத்தை ஐ. ரி.

## நேர்த்தியின் பூர்த்தி

மருதமடு செபமாலைத்தாயாரையும் அர்ச். அந்தோனியாரையும் வேண்டிக்கொண்டதால் நான் கேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். A. M.

அடம்பன

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எங்கள் அருமைச்சகோதரியும், நீர்கொழும்பு கடற்கரைத்தெருப் பெண்பாடசாலைத் தலைமைஆசிரியையுமாகிய சங். சிஸ்ரர் மேரி அலெக்சாண்டிரா சென்றவருடம் மார்கழிமாதம் நெருப்புக்காய்ச்சல் என்னும் கொடியவருத்தத்தால் பீடிக்கப்பட்டு மரணஅவஸ்தையாயிருந்த சமயம், நாங்கள் பரிசுத்த பாத்திமாநாயகியைக் குறித்து வேண்டிக்கொண்டோம். அந்தமன்றாட்டுப்பலத்தால் எங்கள் சகோதரி நற்சுகமடைந்துவிட்டாள். பரிசுத்தபாத்திமாமாதாவின் புகழ் மேன்மேலும் பரவுவதாக.

அ. வார்றப் பறுணாந்துவும்
மற்றும் சகோதர சகோதரிகளும்
மணற்சேனை, கொச்சிக்கடை.

❁ சென்னைநகரிலே பாத்திமாநாயகியின் திருச்சுரூபதரிசனையைப்பற்றி "தமெயில்" எனும் சென்னைத் தினவர்த்தமானி பத்திபத்தியாகப் பலவித செய்திகளையும் பாக்கவெளியிட்டுவந்ததையிட்டுத் தென்னிந்திய கத்தோலிக்க மக்கள் அதனை வெகுவாகப் பாராட்டுகின்றார்கள். இந்தத்தரிசனை கத்தோலிக்கமக்களுக்குப் பெரிதும் விசேஷப்பட்டதும், குதூகலமுமான ஓர் சம்பவம்என்பதை நன்குஉணர்ந்துகொண்ட சென்னைத்தினவர்த்தமானி இஃதுதொன்றுதானும்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residg at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 16 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org